பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ 2/.

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸூ ஆடி மீ 21 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ் பிறை 21 ( 05 08 – 1988 ) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 149

**89 A/L**
(Sat & Sun)
LOGIC -8-00
ECONOMICS-I -9-00
ACCOUNTS -10-00
ECONOMICS-II-11-00
COMMERCE -12-00
TAMIL & HINDUCULTURE- 10-00-12-00
NEW MASTER INSTITUTE
B. M. C. Lane, JAFFNA.

**90 A/L**
(SAT & SUN)
LOGIC 9-00
ECONOMICS 10-00
ACCOUNTS 11-00
COMMERCE 1-00
TAMIL 12-00
HINDUCULTURE -00
NEW MASTER INSTITUTE
1st Lane, Power House Road, JAFFNA.

## வவுனியாவிலிருந்து பவுசர் மூலம் எரிபொருள்

யாழ்ப்பாணம், ஆக 5

குடாநாட்டில் நிலவும் எரிபொருள் பற்றாக்குறையை நீக்குவதற்கு வவுனியாவில் இருந்து பவுசர்கள் மூலம் எரிபொருள் கொண்டு வர நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வாரத்தில் ஒரு முறை ரயில்மூலம் எடுத்துவரப்படும் எரிபொருள் யாழ். குடாநாட்டு மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதாக இல்லை.

அதனால் வவுனியா வரை அதிக 'வகன்'களில் எரிபொருள் எடுத்து வரப்பட்டு, பின்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள, எரிபொருள் முகவர்களின் பவுசர்கள் மூலம் இங்கு கொண்டு வந்து விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

ஆரம்பக் கட்டமாக நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வவுனியாவில் இருந்து மண்ணெண்ணெயையும் டீசலையும் கொண்டுவரவுள்ளது. (ஒ-10)

**பதற்றம்; பரபரப்பு**

## பரந்தனில் நேற்று இயக்க மோதல்!

பரந்தன், குமரபுரம் பகுதியில் இரு இயக்கங்களுக்கிடையே இடம்பெற்ற மோதல் காரணமாக அந்தப் பகுதிகளில் நேற்றுப் பெரும் பதற்றம் நிலவியது.

நேற்று நண்பகல் 11 மணியளவில் குமரபுரம் பாடசாலைக்குச் சமீபமாக இந்த மோதல் நடைபெற்றது.

நேற்று முன் தினம் இயக்கம் ஒன்றின் உறுப்பினரை மாற்று இயக்கத்தினர் இதே இடத்தில் வைத்துக் கடத்திச் சென்றனராம்.

அதன் எதிரொலியாக கடத்திச் செல்லப்பட்ட பிரஸ்தப இயக்க உறுப்பினரைத் தேடும் பணியில் ஈடுபட்டிருந்த சகாக்களுடனேயே இந்த மோதல் இடம்பெற்றதாம்.

சுமார் அரைமணி நேரம் பரஸ்பரம் இரு தரப்பினரும் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டனர்.

மோதலின்போது அந்த வழியாகச் சென்ற பொதுமக்களில் சிலர் காயமடைந்தனராம்.

இவர்களில் ஏ. மாலிங்கம் (22 வயது) என்பவர் தொடையிலே பலத்த காயத்துடன் யாழ் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவங்களை அடுத்து நேற்று பரந்தன் பகுதியில் பரபரப்பு நிலவியது. பரந்தன் கடைகள் அனைத்தும் நண்பகலுடன் இழுத்து மூடப்பட்டன. (ஒ-10-9)

**பூஸாவில் உள்ள**

# தமிழ்க் கைதிகள் சாகும் வரைக்கும் உண்ணாவிரதப்போர்!

## அடுத்த புதன் ஆரம்பிப்பர்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 5

பூஸா தடுப்பு முகாமில் உள்ள நூற்றுக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகள், தங்களை விடுதலை செய்யக்கோரி சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்துள்ளனர்.

தமது உண்ணாவிரதப் போராட்டத்தை எதிர்வரும் புதன்கிழமை (பத்தாம் திகதி) ஆரம்பிக்கப் போவதாக அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள்.

தாம் உண்ணாவிரதம் இருக்கப் போவது குறித்து ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தி எழுதிய மகஜரில்—

விடுதலை இயக்கங்களின் ஆயுத ஒப்படைப்பையும், தமது விடுதலையையும் சம்பந்தப்படுத்துவது பொருத்தமற்றது— என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

பூஸாவில் மிக நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் ஆகக் கடைசியாக, கடந்த மாதம் 18ஆம் திகதி ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு அனுப்பிய மகஜரின் முக்கிய பகுதிகள் வருமாறு:

★ சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் 3 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் விடுதலை செய்யப்பட்டும், எம்மை மட்டும் தொடர்ந்து தடுத்து வைப்பது நியாயபூர்வமற்றதும், ஒப்பந்தத்திற்கு முரணானதுமாகும்.

★ விடுதலை இயக்கங்களின் ஆயுத ஒப்படைப்பையும் எமது விடுதலையையும் சம்பந்தப்படுத்துவது பொருத்தமற்றதாகும்

★ இங்குள்ள கைதிகள் அனைவரும் பொது மன்னிப்புக் கோரிக்கைகளின் கீழ் சத்தியக் கடதாசிகளில் கையொப்பமிட்டுக் கொடுத்துள்ள போதிலும் சிலர் மட்டும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். ஒரே மாதிரியான சத்தியக் கடதாசிகளைச் சமர்ப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தென் இலங்கையில் ஜே.வி.பியினரின் சோதனை

யாழ்ப்பாணம், ஆக 5

தென் இலங்கையில் ஜே. வி. பி. இளைஞர்கள் வாகனங்களைச் சோதனை செய்வதுடன் பிரயாணிகளையும் துருவித் துருவி விசாரணை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சமீபத்தில் வடபகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்களும் தென் பகுதி முஸ்லிம் இளைஞர்களும் சென்ற வான் ஒன்றை யாக்கலை என்னும் இடத்தில் வழி மறித்த ஜே. வி. பி. யைச் சேர்ந்த இளைஞர்கள் விசாரணை நடத்தியுள்ளனர்.

வடபகுதி இளைஞர்களை 'நீங்கள் எல். ரீ. ரீ. ஈயா? என்றும் கேட்டனராம் இல்லை என்று மறுத்ததற்கு எங்களுக்குத் தெரியும் நீங்கள் கொழும்புக்குச் செல்ல வேண்டாம் அங்கே குழப்பம் நடக்கிறது' என்றும் சொல்லி அனுப்பி வைத்தனராம். (ஒ-51)

**ஊரடங்குத் தளர்வை அடுத்து**

## பஸ் சேவைகளின் நேரத்திலும் மாற்றம்

யாழ்ப்பாணம், ஆக 5

ஊரடங்குச் சட்ட நேரம் மாற்றப்பட்டதை அடுத்து வடபிராந்திய போக்குவரத்துசபை பஸ் சேவை நேரங்களையும் மாற்றியுள்ளது.

நேற்று முன் தினம் புதன்கிழமை முதல் ஊரடங்கு உத்தரவு காலை 5 மணி முதல் மாலை 7மணி வரை தளர்த்தப்படுவதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இதற்கமைய காலையில் யாழ்ப்பாணத்திற்குப் புறப்படும் உள்ளூர் பஸ் சேவைகள் அனைத்தும் அந்தந்தப் பகுதியில் இருந்து அதிகாலை 5 மணிக்கு புறப்படும் என்றும், யாழ் நகரிலிருந்து வெளி மாவட்டங்களுக்கான பஸ் சேவைகள் காலை 5.30 மணிக்கு ஆரம்பமாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாலையில் யாழ் நகரிலிருந்து சேவையில் ஈடுபடும் உள்ளூர் பஸ் சேவைகள் அனைத்தும் மாலை 5.15 மணியுடன் நிறுத்திக்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது. (ஒ-10-9)

## நேற்று விடுதலை

புதுடில்லி சுப்ரீம் கோர்ட்டினால் இந்திரா காந்தி கொலை வழக்கில் சுற்றவாளியாகக் காணப்பட்ட மூன்றாவது எதிரியான பல்பீர்சிங் நேற்று திஹார் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டார். (அ-எ)

## புதிய பேச்சு முயற்சி?

# பொறுத்திருந்து பார்ப்போம்

## என்கிறார் பிரதமர் காந்தி

சென்னை ஆக. 5

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குப் புதிதாக முயற்சி எதையும் இந்திய அரசு மேற்கொள்ளுமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்:

இவ்வாறு பிரதமர் திரு. ராஜீவ் காந்தி தெரிவித்தார்.

பிரதமர் ராஜீவ் காந்தி நேற்றுப் பிற்பகல் விசேட விமானம் மூலம் சென்னை வந்து சேர்ந்தார்.

செய்தியாளர் மத்தியில் பேசுகையில் அவர் கூறியதாவது:

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போக்கு இந்தியாவுக்கு சலிப்பை ஏற்படுத்தியுள்ளது. சற்றுச்சோர்வைத் தந்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தாங்கள் கொடுத்த வாக்குறுதிகளில் இருந்தே மீறுகிறார்கள்.

அண்மையில் சென்னையில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரமுகர் திரு கிட்டுவுடன் பேச்சுக்கள் நடத்தியபோது உடன்பாடு ஏற்பட்ட அம்சங்களில் இருந்தும் அவர்கள் பின்வாங்கி விட்டனர்.

தமிழீழ விடுதலைப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதா பதவி நீக்கம் நெடுஞ்செழியன் அறிவிப்பு

சென்னை, ஆ 5

அ. தி. மு. க. (ஜெ) அணியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து செல்வி ஜெயலலிதாவை தற்காலிகமாக விலக்கி இருப்பதாக நாவலர் அணி நேற்று அறிவித்தது.

அ. தி. மு. க. (ஜெ) அணியின் அரசியல் விவகாரக் குழுவைச் சில தினங்களுக்கு முன்னர் செல்வி ஜெயலலிதா கலைத்து விட்டது தெரிந்ததே.

அந்தக் குழுவில் இருந்த நாவலர் நெடுஞ்செழியன், பண்ருட்டி இராமச்சந்திரன், எஸ் அரங்கநாயகம், பி. திருநாவுக்கரசு ஆகியோர் நேற்றுக் கூடி செல்வி ஜெயலலிதாவைத் தற்காலிகமாக

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ஈரோஸ் உறுப்பினர்கள் அமைதிப் படையினரால் கொலை, கைது

## கண்டித்து அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக 5

தமிழ் பேசும்மக்களின் திருப்திகரமான வாழ்வுக்கு வழியமைக்கும் ஆரம்பபணிகளிலும் அரசியல் வேலைத்திட்டங்களிலும் மிகச் சிரத்தையோடு செயற் பட்டுக் கொண்டிருக்கும்நிராயுதபாணிகளான எமது தோழர்கள் கொலை செய்யப் படுவதையும், கைது செய்யப்படுவதையும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

எமது மட்டக்களப்பு-அம்பாறை பொறுப்பாளர் கிருபாகரன்உட்பட அனைத்துதோழர்களையும் உடனடியாக விடுதலை செய்யுமாறு கோருகிறோம்.

— இவ்வாறு ஈரோஸ் இயக்கத்தினர் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

நாம் 87 யூலை 29 இந்திய - இலங்கைஉடன்படிக்கையைத் தொடர்ந்து இந்திய அரசின் மேலுள்ள நம்பிக்கையின் அடிப்படையில் எம்மிடமிருந்த ஆயுதங்களையெல்லாம் கையளித்திருந்தும் ஆங்காங்கு எமது தோழர்கள் இந்திய அமைதிப்படையினரால் கைது செய்யப்பட்டும் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டும் நெருக்கடி நிலையிலேயே செயற்பட்டுவந்துள்ளனர்.

பொத்துவில் 60 ஆம் கட்டையைச் சேர்ந்த தோழர் ஜெயசீலன் இன்ஸ்பெக்டர் ஏத்தம் என்ற இடத்தில்வைத்து 16. 07. 88 அன்று இந்திய அமைதிப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டு உள்ளார்.

இதேபோன்று இன்னொரு நடவடிக்கையின் போது மன்னாரில் உயிலங்குளம் என்ற இடத்தில் எமது தோழர் ரேய் அமைதிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். மன்னாரில் தோழர் பவான் அமைதிப் படையினரால் மிருகத்தனமாக தாக்கப்பட்டுள்ளார்.

இந்நிகழ்வுக்குப் பின்னாலிருக்கும் சக்தியினை எண்ணி நாம் வெட்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



ஒருதரை ஒருதர் மாறிப் பதவி நீக்கம் செய்யட்டும். சட்சிளந்தப் பாதாளத்திலே போய் விழுமோ, ஆருக்குத் தெரியும்...!

## புல்லுமலையில் நிலக்கண்ணி

### 6 ஜவான்கள் பலி

கொழும்பு, ஆக 5

மட்டக்களப்பு, புல்லுமலைப் பகுதியில் நிலக்கண்ணி வெடித் தாக்குதலில் இந்திய அமைதிப் படையைச் சேர்ந்த ஆறு ஜவான்கள் உயிரிழந்தனர்.

இச்சம்பவம் நேற்று கொப்பா வெளியில் இடம்பெற்றது. (ஒ-எ)

**சுபநேரம்**

5 – 8 1988
ஆடி – 21
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:
06-04 முதல் 07-34வரை
ராகுகாலம்:
10-34முதல் 12 04வரை
அட்டமி நவமி
இவை பாலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## மாங்குளத்தில் இந்திய செஞ்சிலுவைச் சங்க ஜீப் கண்ணியில் சிக்கியது

### டாக்டர்கள் இருவர் பலி!

யாழ்ப்பாணம், ஆக 5

இந்திய அமைதிப் படையின் பாதுகாப்புடன் சென்ற இந்திய செஞ்சிலுவைச் சங்க ஜீப் ஒன்று மாங்குளத்தில் கண்ணிவெடியில் சிக்கியதில் அதில் பயணம் செய்த இரு டாக்டர்கள் மரணமடைந்தார்கள், ஒருவர் பலத்த காயத்திற்குள்ளானார்.

அமைதிப் படையினர் நேற்று சென்னையில் விடுத்த அறிக்கை ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் 2 மணியளவில் மாங்குளம் இராணுவ முகாமுக்குச் சமீபமாக நடைபெற்றது.

கண்ணிவெடிச் சம்பவத்தில் சிக்கியவர்களை முகாமிலிருந்து வந்த படையினர் உடனடியாக அவ்வழியாக வந்த இ. போ. சபை பஸ் ஒன்றில் ஏற்றி முகாமுக்கு எடுத்துச்சென்றனர்.

பின்னர் அவர்கள் ஹெலிக்கொப்டரில் ஏற்றப்பட்டு கொண்டுசெல்லப்பட்டனர் என அறிய வந்தது.

இந்தச் சம்பவத்தை அடுத்து அந்தப் பாதையூடான போக்குவரத்துச் சேவைகள் சிலமணி நேரம் ஸ்தம்பிதமடைந்தன. (ஒ-9-10)

**யாழ் நகர மக்களுக்கு நேற்றிரவு ஏற்பட்ட அனுபவம்:**

# மின் விளக்குகள் தானாக எரிந்தன! சில வெடித்துச் சிதறின!!

## ரீ. வி. டெக், மின் விசிறிகள் சேதம்; ஷெல்லடியால் ஏற்பட்ட வினை

— உதயன் செய்தியாளர் அகிலாஜ் —

யாழ்ப்பாணம், ஆக. 5

யாழ்நகரில் ஆஸ்பத்திரி வீதி, கேம்படிச் சந்திக்கும் முலைவைச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் புதன் இரவு மின்வலு திடீரென இருமடங்காக அதிகரித்ததனால் பெரும் சேதங்கள் ஏற்பட்டன.

பல வீடுகளில் நள்ளிரவில் மின்விளக்குகள் தானாகவே எரிய ஆரம்பித்தன, சில மின்விளக்குகள் வெடித்துச் சிதறின. ரீவி, டெக், ரேடியோ, மேசை மின் விசிறிகள், தண்ணீர் மோட்டர்கள் மின் வலு ஏற்றத்தால் சேதம் அடைந்தன.

இரவு படுக்கப்போகும் போது அணைக்கப்பட்டிருந்த ரியூப் பல்புகள், மேசை மின்விசிறிகள் நள்ளிரவில் திடீர் என இயங்க ஆரம்பித்தபோது சிலர் ஆவியின் சேஷ்டையோ என்று பீதி அடைந்தனர்.

இது தொடர்பாக எமது உதயன் செய்தியாளர் சில வீடுகளுக்கு நேரடியாகச் சென்று வினவியபோது அவர்கள் தமது அவலங்களைத் தெரிவித்தனர்.

யாழ் சென். பீற்றர்ஸ் லேனில் ஆர். வி. கந்தசாமி என்பவர் தனது அனுபவத்தை தெரிவித்ததாவது:-

நள்ளிரவு வேளையில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கல்விமான் சபாலிங்கம் காலமானார்

யாழ். மத்திய கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் அதிபரான திரு. இளையதம்பி சபாலிங்கம் தமது 69 ஆவது வயதில் லண்டனில் நேற்றுக் கால

(6 ஆம் பக்கம் பார்க்க)

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஒலிவேக்கிங் டீ பிறீசர் (D. Freezer) விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். "சேவ்ரி ரவல்ஸ்" 102, 3-ம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம், (5530)

பாவித்த வீட்டுத்தளபாடங்கள் மெத்தைகள், கட்டில், அலுமாரி, Hall Set சாப்பாட்டு மேசை, கண்ணாடி மேசை, விருந்தை கதிரைகள், பிளாஸ்ரிக் கதிரைகள், மேசைகள், பழைய கதவு, நிலைகள் மற்றும் பல மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. M. தியாகராஜன் 326, பிரதான வீதி யாழ்ப்பாணம் (சென்பற்றிக்ஸ் சந்தியருகில்.) (5437)

நீக்கொண்டிஷன் ஹொண்டா C 50, C 70, C 90, Racoon விற்பனைக்கு உண்டு. திருவாசி, ஸ்தூபி, பெரியமணி, குத்துவிளக்கு, Sports Cups மற்றும் கோயில் பொருள்களும் கிடைக்கும் இடம் S. லம்ஸ் 26/B, மானிப்பாய் வீதி, கிளை:- 76/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (5398)

## வீடு விற்பனைக்கு

நல்லூர் கைலாசபிள்ளையார் வீதியில் 5 அறைகள் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. [1¾ பரப்பில்] தொடர்பு கொள்ளவும் 311 C/O உதயன் யாழ்ப்பாணம் C/6050

## கதவு நிலை விற்பனைக்கு

எங்களிடம் 9 அடி அகலம் 7 அடி உயரம் உடைய நிலையும், கதவும்; திராந்தி. தகடு (6 அடி) ஆகியவை விற்பனைக்குண்டு. தொடர்பு: சைக்கிள் சென்ரர் (Cycle Centre) இல. 148, கே.கே. எஸ் ரோட், யாழ்ப்பாணம். (5505)

## சைக்கிள் விற்பனை

Chun - Hua - , 'சன்குவா'' சைக்கிள் விற்பனைக்குண்டு. நல்ல நிலையில் உள்ள மகளிருக்கான சைக்கிள். விலை நேரில் கதைத்துக்கொள்ளலாம். தொடர்பு 98/1, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். (5539)

## ரொபி செய்யும் மெஷின் விற்பனை

டொபி, இனிப்பு செய்யக்கூடிய கைமெஷின் அச்சு மற்றும் எல்லா உபகரணங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு விலாசம்:- 404, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோயிலுக்கும் இடையில்) (5536)

## வீடியோ படப்பிடிப்பு

அதி நவீன வீடியோ கமரு மூலம் திருமணம், பிறந்தநாள் நிகழ்ச்சிகளை வண்ணக்கலர்களில் இந்தியாவிலும், இலங்கையிலும் பல வருடங்கள் வீடியோ படப்பிடிப்பில் அனுபவமுள்ள கமரு இயக்குனர்கள் மூலம் வீடியோ படமாக்கிக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம் விக்ரர் அன்சன்ஸ். (1) இல: 100 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (2) இல: 887 ஆஸ்பத்திரி வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம். C/6049

## தேவை

(1) யாழ்மாநகரசபை எல்லைக்குள் வீடு கட்டுவதற்கு உகந்த காணி தேவை. (2) யாழ் கச்சேரிக்கு அண்மையாக சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு தேவை. (3) ஒரு ரக்ரர் (Tractor) லோட் முட்கிளுவை தேவை. தொடர்பு:- J.P.T. Ltd 3, நவீன சந்தை (மேல் மாடி) யாழ்ப்பாணம். (5525)

அப்பளம் தயாரிப்பதில் அனுபவம் உள்ள பெண்பிள்ளைகளும், வேலை பழகுபவர்களும் தேவை. நேரில் வரவும். முகவரி: அப்பளக் கம்பனி, இல.18. கொண்டலடி லேன், (சங்கிலியன் வீதி ஒழுங்கை) நல்லூர், யாழ்ப்பாணம். (5534)

## மணமகள் தேவை

A/L சித்தியடைந்தவரும் குவைத்திலிருந்து திரும்பிவரும் யாழ்ப்பாண இந்து வேளாள 33 வயது Administrative Officerக்கு அழகியமணப்பெண்ணை பெற்றோர் விரும்புகின்றனர். சாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 174, C/o உதயன் யாழ்ப்பாணம். (5450)

## பட்டதாரி மணமகள் தேவை

யாழ்/ இந்துவேளாளர் குலத்தைச் சேர்ந்த 27 வயது நிரம்பிய B.Sc சிவில் பொறியியலாளருக்கு (Engineer) பட்டதாரி மணமகள் தேவை. செவ்வாய் குற்றமற்ற உத்தரம் நட்சத்திரம். தொடர்பு: ABCDE விவாகப் பொருத்துனர், 328, நாவலர் ரோட், ஆனைப்பந்தி. (5537)

## எண் சோதிடம்

அதிர்ஷ்டசாலியாக வாழ்வது எப்படி? விற்பனையாகிறது. ரூபா 2/- சோதிடர் V. A. சிவராசா வேலணை. எதிர்பாருங்கள் வக்கரித்த சனீஸ்வரன் கொக்கரித்து வருகின்றார். (5535)

## மணமகன் தேவை

யாழ். இந்து வேளாள குல 32 வயது, 5'-5'' உயரமுடைய I.C.M.A முதல் பகுதி சித்தியடைந்த 8ல் செவ்வாயுள்ள (குற்றமற்றது) பெண்ணிற்கு யாழ் இந்து வேளாள குல வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், பட்டதாரி அல்லது மேற்கூறிய தொழிற்குச் சமமான கல்வித் தகைமையுள்ள மணமகன் தேவை. முதல் கடிதத்திலேயே சாதகத்தின் பிரதியுடன் முழு விபரத்தையும் தெரிவிக்கவும். முகவரி இல. 310, C/o உதயன், யாழ்ப்பாணம். (5532)

## வகுப்புகள்

O/L Day Classes வடமாகாணத்தில் நிபுணத்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் நடாத்தப்படுகின்றது: விஞ்ஞானம் - R. செல்வவடிவேல், கணிதம் -T. தயாபரன்; சமூகக்கல்வி, வர்த்தகம்- K. S. முத்துலிங்கம், ஆங்கிலம்- தெய்வர்; தமிழ் - பொன். செல்வராசா, Royal Institute, Manipay. (5503)

## சோதிட மாந்திரீக நிபுணர்

நினைத்த காரியம், ஜாதகபலன், விவாகப் பொருத்தம், எண்சோதிடம், தொழில்விருத்தி, மங்கள மணவாழ்வு, மனையில் இலக்குமி கடாட்சம், நோய்பிணி தீரல், சத்துருஜெயம், முதலான மாந்திரீக விடயங்களுக்கும் நாடுங்கள் 'சக்தி சரவண' (அரச அங்கீகாரம் பெற்ற சோதிடரும், மட்டக்களப்பு பாரம்பரிய - பரம்பரை மாந்திரீக நிபுணரும்) 210, கஸ்தூரியார் வீதி. (யாழ் / இந்துக்கல்லூரி மைதானத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம். (C/5962)

## தவறி விட்டது

கந்தப்பிள்ளை அரியரத்தினம் ஆகிய எனது அடையாள அட்டை (630362237 V) 2-8-88 அன்று யாழ் பஸ்தரிப்பு நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (5533)

# 45ஆவது நாள் நினைவஞ்சலி



செல்வன்
சின்னத்துரை செல்வரத்தினம்

மலர்வு: 22- 8- 1964
உதிர்வு: 22- 6- 1988

நட்பின் இலக்கணமாய், பண்பின் பெட்டகமாய், பாசத்தின் பிறப்பிடமாய், கலையின் எழிலுருவாய், கண்டோர் வியக்கும் கட்டிளங் காளையாய் வாழ்ந்த நண்பனே! காலமில்லாக் காலத்தில் காலன் வயப்பட நேர்ந்ததை எண்ணி எண்ணி என்றும் துயருறுகின்றோம் எமது அஞ்சலி இன்று போல் என்றும் உள.

**மாவை - இளானை வாழ் நண்பர்கள்.**
(5453)

# பதவி வெற்றிடம்

**யாழ்ப்பாணம் பல நோ. கூ. சங்கம் -வரைவுள்ளது**

**லொறிச் சாரதி வெற்றிடம் - இரண்டு**
(குறியீட்டு இல. 312/11)

மேற்காணும் பதவிக்கு யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வயது : 25 — 45

சம்பள அளவுத் திட்டம் -312/11 சாரதி $\frac{300 \quad — \quad 540}{15 \times 12 \; — \; 20 \times 3}$

அத்துடன் கூட்டுறவு ஊழியர்களுக்கு வழங்கப்படும் சகல படிகளும் சேர்த்து வழங்கப்படும் (ரூபா 819/-)

உரொக்கப் பிணை — சம்பளத்தின் ஐந்து மடங்கு

தகமைகள் — 5 ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழுடன் பஸ்/ லொறி/ ரக்டர் (பெட்டியுடன்) சாரதி அனுமதிப் பத்திரமும் நான்கு வருடங்களுக்குக் குறையாத சேவை அனுபவமும், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்களும்.

இவ்விண்ணப்பத்தின் மேல் உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டு, 18 - 08 - 1988 க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக ''பொது முகாமையாளர், யாழ். பல நோ. கூ. சங்கம், 259, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்'' என்னும் விலாசத்துக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை மேற்படி விலாசத்தில் உள்ள சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

259, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
4. 8. 88

**பொது முகாமையாளர்.**

(C 6048)

# தமிழ் காக்க விலையாகத்-தன் தலையைத் தந்தவனுக்காக



இளம்வேங்கை
**தவலிங்கம் ரவிச்சந்திரன்**
(ரேகன்)

அன்னை அணைப்பில்: 1971-04-11
அநியாய அழிப்பில்: 1988-05-05

மலரப் பிறந்த மொட்டுக்கள்
மலர முன் மாண்டது போல்,
மலரப் போகுமுரிமை மண்ணுக்காக
மாண்டு விட்ட வீரனே
அலற வெடிக்கும் பீரங்கி முன்னால்
உரிமைக் குரலே உரப்பாடும்
உலர்ந்து விட்ட வாழ்வினுன்
உண்மைத் தியாகம் உரமாகும்

தன் எதிர்கால வாழ்வையும் கருத்திற் கொள்ளாமல் சுதந்திர உணர்வு கொண்டு தாய் மண்ணுக்காக நின் உயிர் ஈய்ந்த வீரத்தியாகியான உன்னை என்றும் நாம் மறவோமென எம் நெஞ்சக் கனல் மீது ஆணையிட்டு உரைக்கின்றோம்.

**நண்பர்கள்.**
பருத்தித்துறை. (5448)

# 41ஆம் நாள் நினைவு அஞ்சலி



அமரத்துவமெய்திய எங்கள் குலவிளக்கு

**திருமதி கணபதிப்பிள்ளை மனோன்மணி**

பூவுலகில்: 25-05-1938
பொன்னுலகில், 26-06-1988

அன்பின் திருவுருவே
ஆசையுள்ள எம் தாயே
பாசத்தின் பிறப்பிடமே
பாசமுள்ள எம்தாயே
பண்பின் உறைவிடமே
பார்புகழும் உத்தமியே
கண்ணே மனோன்மணியே
கருணை உள்ள எம்தாயே
காலமெல்லாம் எம்மை
கண் கலங்க வைத்துவிட்டு
கன தூரம் சென்றவளே
கதியினி இல்லை அம்மா
தாயே மனோன்மணியே – நின்
தாள் பணிந்து வேண்டுகின்றோம்
தயவாய் எமக்கருள்வீர்
உத்தமியே உம்மை அன்றி
வேறு தெய்வம் எமக்கில்லை – உறுதி இது.
உங்கள் ஆத்மா சாந்திபெற
வேண்டி நிற்கின்றோம்.

**கணவன், பிள்ளைகள், மருமகன், உறவினர்கள், நண்பர்கள்.**

இடந்தரை ஒழுங்கை,
காங்கேசன்துறை.

(C 6043)

# மினி சினிமாக்களின் கவனத்திற்கு

C. I. D. அர்ஜுன் என்ற தமிழ் திரைப்படத்தை யா. மா. மி. சினிமா சங்கத்தின் தணிக்கையின் பின்பே உங்கள் மினிகளில் திரையிடும்படி வேண்டுகின்றோம்.

இங்ஙனம்
தலைவர்
**யா. மா. மி. சி. சங்கம்**
(5595)

# DIPLOMA IN NURSING

9 ஆம் பிரிவு

**ஆரம்பமாகிவிட்டது**

உங்கள் பதிவுகட்கு

**North Ceylon Technical Institute**

14, St. Peters Lane,
Jaffna.

(C. 6054)

# IN TREASURED MEMORY OF



HELEN PACKIAM GUNARATNAM

Remembered on the First Anniversary of her death by her loved ones.

"The face we love is missing
The voice we love is still
The hands that did so much for us
are resting in Jesus' will."

'VIOLET COTTA'E'
Uduvil.

(5593)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**சுஜந்தன் குணநாயகம்**

தோற்றம்: 15-12-1980
மறைவு: 06-07-1988

முருகனின் அருளினாலே சுஜந்தாய் வந்துதித்தாய் எம்முடனே எட்டாண்டு எழிலுடனே இருந்தாய் எங்கள் குடும்பத்தின் தலைமகனே என்னென்று நாம் உம்மை மறப்பது-நீர் பாடிய பாட்டுக்களும் பேசிய ஒவ்வொரு வசனமும் எமது செவிகளில் ஒலித்த வண்ணமே இருக்கிறது. உமது ஒவ்வொரு செயலும் உமக்கு இவ் உலகில் பெரும் வாழ்வு இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டியதே- எம்மையெல்லாம் விட்டு விட்டு ஒரு கணப்பொழுதில் மறைந்து விட்டாயே- உன் பிரிவால் தினம் தினம் வேதனையால் துடிக்கும் அப்பா, அம்மா, சகோதரங்கள்.

**குணநாயகம் குடும்பத்தினர்.**
கோண்டாவில் கிழக்கு.

[5587]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகுக்கு எமது நிலையை விளக்கும் மொழியாக இருப்பது ஆங்கிலமே

காங்கேசன்துறை, ஆக 5
உலக போதனை மொழியாகவும், எம் நிலையை எடுத்து விளக்கும் மொழியாகவும், வேலைவாய்ப்பு மொழியாகவும் ஆங்கில மொழி உள்ளது. அம்மொழியறிவு அற்றவர்களாகஇருந்தால் சைகை

## ஆங்கிலத்தின் முக்கியத்துவம் குறித்து கல்விப் பணிப்பாளர்

மொழி மூலம் தான் விளக்க வேண்டிய நிலை ஏற்படும். திணிப்பு இல்லாமல் தேவையான மொழி என்ற உணர்வுடன் நாம் அம் மொழி அறிவைப் பெற வேண்டும்.

இப்படிக் கூறினார் வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம்.

பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கான ஆங்கில பயிற்சி நெறியை வைபவரீதியாகஆரம்பித்து வைத்து அவர் உரையாற்றினார்.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில்இடம்பெற்ற இக் கூட்டத்துக்கு யாழ். கல்வி அதிகாரியும், ஆங்கில பாடநெறி இணைப்பு அதிகாரியுமான திரு. இ.க.குலசேகரம் தலைமை வகித்தார்.

பணிப்பாளர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

1956 ஆம் ஆண்டு அமுலாக்கப்பட்ட சுயபாஷா திட்டத்துக்குப் பின் ஆங்லம் இரண்டாவது மொழியாக்கப்பட்டது. அதில் இருந்து ஆங்கிலத்தின் தரம் வீழ்ச்சி அடைந்தது.

முன்பு தமிழ் பாடத்தை விடமற்றைய சகல பாடங்களையும் ஆங்கிலத்தில்பயிலவாய்ப்புக்கிடைத்தது. அதன் மூலம் தாய்மொழியுடன் ஆங்கில மொழியிலும் பாண்டித்தியம் பெற்றதன் காரணமாக வெளிநாடுகளில் உயர் பதவிகள் பெற்றது மட்டுமன்றி, நாட்டிலேயே உயர் பதவிகளைப் பெறமுடிந்தது.

இன்று ஆங்கில மொழியின் தரத்தை நோக்கும் போது இவை சாத்தியமா? தமிழ்மொழியுடன் ஆங்கிலத்துக்கு சம அந்தஸ்து கொடுக்கப்பட்டிருந்தால் இன்றைய நிலை ஏற்பட்டிருக்காது.

தமிழ்மொழியின் சிறப்பும் இன்று உயர்வடைந்து வருகிறது.

திருக்குறள் ஜெர்மன் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு அவர்கள் இன்று அதனை ஒரு அறநூலாக மதிக்கிறார்கள். சிறப்புமிக்க தமிழ்மொழியுடன் தேவை நோக்கில ஆங்கிலத்தையும் பயில வேண்டியதவசியம்.

இப்படி அவர் கூறினார் கல்வி அதிகாரி திரு. இ. க. குலசேகரம் பேசுகையில் கூறியதாவது:

பல்கலைக்கழக அனுமதி என்பது ஒரு சாதாரண விடயமல்ல. தரப்படுத்தல் உட்பட பல தடைகளைத் தாண்டி பல்கலைக்கழகம் செல்பவர்கள் தம் கல்வியைத் தொடர ஆங்கிலம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்பதற்காகவே இப்பயிற்சி நெறி நடாத்தப்படுகிறது.

ஆறுமாத காலம் நடத்தப்படும் இப்பயிற்சி நெறி மூலம் பாண்டித்தியம் பெற வேண்டியது அவசியம்.

இப்படி அவர் கூறினார்.

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. சி. சிவமகாராசா பேசுகையில், கூட்டுறவுத் துறையுடன் இணைந்த ஒரு பணிப்பாளரைப் பெற்றதில் இருந்து நாம் சந்தோஷப்படுகிறோம். அவர் கல்வி வளர்ச்சியில் மட்டுமல்ல கூட்டுறவுக் கல்வியிலும் நாட்டம் கொள்வார் என எதிர்பார்க்கிறோம் என்றார்.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அதிபர் திரு. ஸ்ரீபுஸ்பநாதன் மகாஜனா அதிபர் திரு. எஸ். நாகராசா உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

(இ - 68)

### புலோலி ப. நோ. கூ. ச கூட்டம்

பருத்தித்துறை, ஆக. 5
புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00மணி அளவில் பிரதம சங்கப் பணிமனையில் திரு. ப. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெறும்.

இப் பொதுக் கூட்டத்தில் பொதுச்சபைப் பிரதிநிதிகள் மத்தியிலிருந்து ஏழு புதிய நெறியாளர் சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

(இ- 118)

## பாதயாத்திரை: நாம் செய்த மகா புண்ணியம்

### உதவி அரச அதிபர் உரை

கொடிகாமம், ஆக. 5
மக்களிடம் ஆன்மீக உணர்வையும், அமைதியையும் நிலை நாட்டும் பொருட்டு திரு முத்தையா அவர்கள் பல பக்தர்கள் குழுவுடன் இக்காலகட்டத்தில் பாதையாத்திரை செய்வது நாம் செய்த மகாபுண்ணியம் ஆகும்.

தென்மராட்சித் திருத்தலம் பாதயாத்திரைக் குழுவினரை வரணிப் பிள்ளையார் கோவிலில் வரவேற்றுப் பேசிய சாவகச்சேரி உதவி அரச அதிபர் திரு. புண்ணியமூர்த்தி சுந்தரம்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

பாதயாத்திரைக் குழுத்தலைவர் ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா பேசுகையில்; நாட்டில் சமாதானம் வேண்டி நாம் பாதயாத்திரை செய்கிறோம்.

எம்முடன் பக்தர்கள் தொடர்ந்து கூடிப்பாடி வரவேண்டும்.

இது உங்கள் வருங்கால சந்ததியின் சைவ சமய நெறிக்கு அஸ்திவாரமாக அமையும் என்றார்.

சாவகச்சேரி செருக்கல் பிள்ளையார் கோவிலில் இருந்து புறப்பட்ட இக் குழுவினர் ஞாயிறுவரை 150 கோவில்களைத் தரிசித்தனர்,

சனிக்கிழமை காலை சாவகச்சேரி வீரபத்திர கோயிலைத்தரிசித்து யாத்திரையை இவர்கள் நிறைவேற்றுவர். ஊரடங்குச் சட்டம் பாதயாத்திரையைப் பாதிக்கவில்லை.

(இ- 75)

### பளைப் பகுதியில் செவன திட்டத்தில் வீடுகள்

பச்சிலைப்பள்ளி, ஆக. 5
பளை, உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பதின்மூன்று கிராம சேவை அலுவலர் பகுதிகள் செவன்நிதித் திட்டத்தின்கீழ் வீடுகள் அமைப்பதற்கு ரூபா அறுபத்தையாயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

வறிய குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவ்வப்பகுதிச் சங்கங்கள் மூலம் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக பளை உதவி அரசாங்க அதிபர் திரு. செ. கந்தசாமி தெரிவித்தார்.

### திருவிழாவில் சங்கிலி அறுப்பு

கோப்பாய், ஆக 5
கோப்பாய் வடக்கு பளனை அம்மன் கோவில் வருடாந்த இரத உற்சவத்தின் போது பெண் ஒருவரின் 3 பவுண் தங்கச் சங்கிலி அறுக்கப்பட்டது.

(இ-72)

### நெடுந்தீவில்

நெடுந்தீவு, ஆக. 5
நெடுந்தீவில் பதினேழு பேருக்கு ஆரம்ப ஆசிரியர் நியமனம் கிடைத்துள்ளது.

(இ - 111)


வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான

**கம்பியூட்டர் கல்வி**

Computer Programming in Basic Language
ஆரம்பம் : 8 - 8 - 88
திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்
பயிற்சிக்காலம் : 40 நாள்
கட்டணம் : ரூபா 750/-
(இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்)
O/L படித்த இருபாலாரும் சேரலாம்.
கூடிய நேர செய்முறைப் பயிற்சி
AMSTRAD (MICRO COMPUTER), E G 2000 (P C), COMMODORE
கம்பியூட்டரில் வழங்கப்படும்.
பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

DIPLOMA IN COMPUTER PROGRAMMING
COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING IN BASIC AND COBOL LANGUAGE
பயிற்சிக்காலம்: 6 மாதம்
குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள் ஆகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பதிவு செய்யவும்.

**UNIKCO COMPUTER CENTRE**
No: 5, மின்சார நிலைய வீதி,
2 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(உப தபால் கந்தோர் அருகாமை)
(C 6039)


## புங்குடுதீவில் கொள்ளை

யாழ்ப்பாணம், ஆக. 5
புங்குடுதீவில் உள்ள ஒருவரின் வீட்டினுள் நுழைந்த இனந்தெரியாத ஆயுதக் கோஷ்டியினர் வீட்டில் உள்ளவர்களைப் பயமுறுத்தி விட்டு இரண்டு லட்சம் ரூபா பணத்தையும், மூன்று லட்சம் பெறுமதியான நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

புங்குடுதீவைச்சேர்ந்த கோபாலப்பிள்ளை என்பவரது வீட்டிலேயே இக் கொள்ளைச் சம்பவம் நடைபெற்றது.

இக்கொள்ளைச் சம்பவம் பற்றியாழ்.பொலீஸ் பிரிவில் முறையிடப்பட்டுள்ளது. (இ-9)

## குரோத மனப்பான்மையை மறந்து! ஒன்றுகூடுவதே உண்மையான கலந்துரையாடல்

வடமராட்சி, ஆக 5
குரோத மனப்பான்மைகளை மறந்து ஒன்று சேர்வதே உண்மையான கலந்துரையாடல்ஆகும்.

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி உயர் வகுப்பு மாணவர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட வடமராட்சிக் கோட்டக் கல்வி அதிகாரி செல்வி ரி. பெரிய தம்பி மேற்கண்டவாறு கூறினார்.

இந்த வைபவம் அண்மையில் கல்லூரி கலாசார மண்டபத்தில் உயர் வகுப்பு மாணவர் தலைவர் எஸ். நவாகரன் தலைமையில் நடைபெற்றது.

செல்வி ரி. பெரிய தம்பி மேலும் பேசுகையில் ''மாணவர் சமுதாயம் என்றும் கள்ளம் கபடமற்ற ஒரு திறந்த வெளியாகக் காணப்பட வேண்டும் என்றார்.

வைபவத்தில் கல்லூரி அதிபர் கே. சிவபாதசுந்தரம், எஸ். யோகராசா [ஆசிரியர்], மாணவர்கள் மா. பாஸ்கரன், எஸ். கர்ணன், வி. சண்முகநாதன் ஆகியோரும் உரையாற்றினார்கள். (இ-160)

## குளிர்சாதனப் பெட்டிக்குள் ஆஸ்பத்திரி உணவுப் பொருள் போனது: எப்படி?

மட்டக்களப்பு, ஆகஸ்ட் 5
மட்டக்களப்பு பொது வைத்தியசாலையிலுள்ள நோயாளர்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட மாஜரின், மீன் ஆகியன வார்ட் ஒன்றில் இருந்த குளிர்சாதனப் பெட்டியிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டனவாம்.

இச்சம்பவம் கடந்த வார இறுதியில் நடைபெற்றது.

சம்பவம பற்றிக் கூறப்படுவதாவது;
வைத்தியசாலையில் உணவுப் பொருள்கள் கையாடப் படுவது குறித்து வைத்தியசாலை மேற்பார்வைக் குழுவுக்குப் புகார்கள் கிடைத்திருந்தன.

சம்பவதினம் மேற்படி குழுக்கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தசமயம் குழுவினர் வைத்தியசாலை அதிகாரிகள் சகிதம் வார்ட்டுகளில் திடீர் சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போதே வார்ட் ஒன்றின் குளிர் சாதனப் பெட்டியில் மேற்படி பொருள்கள் காணப்பட்டனவாம்.

இச்சம்பவம் குறித்து சமயலறை ஊழியர்கள், வார்ட் தாதி ஆகியோர் உட்படப் பலர் விசாரணை செய்யப்பட்டனர் என்று வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் குமாரவேற்பிள்ளை தெரிவித்தார். (இ-21)

## பன்குளத்தில் தாக்குதல்

திருகோணமலை ஆக 5
பன்குளத்தில் தமிழ் மக்கள் தாக்கப்படுகின்றனர் என்று கூறப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை பன்குளத்திற்கு அப்பால் கண்ணிவெடி ஒன்று வெடித்ததை அடுத்து இந்தத் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெறுவதாகக் கூறப்படுகிறது.

பன்குளத்திலிருந்து 15 பெண்கள் திருமலைக்கு வந்து பிரஜைகள் குழுவிடம் இது தொடர்பாக முறையிட்டுள்ளனர். (இ-150)

## வெற்றியும் தோல்வியும் குறிப்பிட்ட இலக்கை அடைவதற்கே உதவும்

பலாலி ஆக 5
விளையாட்டுப் போட்டிகளில் நாம் பெறும் வெற்றி, தோல்வி என்பன- இலட்சியப்பற்றுடன் தொழிற்படும் ஒரு இலக்கைக் கொண்ட நடவடிக்கையில், தோல்வியைப் பாடமாகக் கொண்டு வெற்றிக்கு வழி அமைப்பதற்கும், வெற்றியைத் தொடர்ந்து முன்னேறுவதற்கான வழி காட்டுவதற்கும் உதவும்.

யூனியன் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் கலந்து கொண்டு உரையாற்றிய தெல்லிப்பளைக் கல்வி வலய கொத்தணி- அதிபர். திரு ஸ்ரீ புஸ்பநாதன் மேற் கண்டவாறு கூறினார்.

இவ் விளையாட்டுப் போட்டியில் துரைரத்தினம் இல்லம், 337 புள்ளிகளையும், மித் இல்லம் 333புள்ளிகளையும், 'வாட்' இல்லம் 284 புள்ளிகளையும், 'டிச்சன்' இல்லம் 259 புள்ளிகளையும் பெற்று முறையே முதலாம், இரண்டாம், மூன்றும்' நான்காம் இடங்களைப் பெற்றன.

துரைரத்தினம் இல்லம் தொடர்ந்தும் இரண்டு வருடங்களாக முதலிடத்தை [illegible] (இ-19)

### நிதி ஒதுக்கியும் கட்டட வேலை ஆரம்பம் இல்லை

பச்சிலைப்பள்ளி ஆக- 5
பளை அரசினர் வைத்தியசாலையில் புதிய கட்டடம் அமைப்பதற்கென கடந்த வருடம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது ஆனால் இன்று வரை அக் கட்டடம் சம்பந்தமான ஆரம்ப நடவடிக்கைகள் கூட எடுக்கப்படவில்லை என பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

(இ)

## மாதகல் இந்து மயானப்பகுதி மண் அள்ளுவோரால் பாதிப்பு

### கடல்நீர் உட்புகும் ஆபத்து

பண்டத்தரிப்பு, ஆக.5
மாதகல் இந்து மயானப் பகுதியில் கடல்நீர் கிராமத்திற்குள் புகும் அபாயம் தோன்றியுள்ளது.

மாதகல் கடற்கரைப் பகுதியில் வர்த்தக ரீதியில் மண் அள்ளுவோரால் இந்த அனர்த்தம் உண்டாகின்றது.

இதே நிலை மண்கும்பான் பகுதியிலும்இருந்து வருவது தெரிந்ததே.

மண்கும்பான் பகுதியில் இடம்பெறுவது போல் கடல்நீரால் நமது கிணறு உவர்த்தன்மை அடையலாம் என்றுமாதகல் கரையோர மக்கள் அஞ்சுகின்றனர்.

மண் அள்ளுவோரைத் தடுக்க முயலும்போது அது பெரும் மோதலை உருவாக்கும் நிலையைத் தோற்றுவிப்பதாக கரையோரக் கிராமவாசிகள் தெரிவிக்கின்றனர்.

### கோரிக்கை

நெடுந்தீவு, ஆக. 5
அரச படகுச்சேவை இடம்பெறும் திங்கள், வெள்ளிக்கிழமைகளில இங்கு பணியாற்றும் வெளியிடங்களைச் சேர்ந்த அரசாங்க ஊழியர்களின் நலன்கருதி இரண்டு சேவைகள் இடம்பெற நடவடிக்கை எடுக்குமாறு நெடுந்தீவுப் பிரஜைகள்குழு, நெடுந்தீவு முன்னேற்றக் கழகம் என்பன நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

(இ- 111)

## ஆங்கிலப் பயிற்சி சேவை ஆசிரியர் மேலும் இருவர்

காங்கேசன்துறை, ஆக 5
யாழ் மாவட்ட பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்குடன் கல்விப் பணிப்பாளர் மேற்கொண்ட முயற்சியால் மேலும் இரு ஆங்கிலப்பயிற்சிச்சேவை ஆசிரியர்கள நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றுள்ள திரு. வெ. சபாநாயகம், யாழ் மாவட்ட பாடசாலைகளின் ஆங்கிலத் தரம் குறித்து கல்வி அமைச்சு அதிகாரிகளுக்கு விளக்கி பயிற்சி அளிக்கும் ஆசிரியர்கள் தேவை எனக் கேட்டிருந்தார்.

இதன் பயனாக தற்சமயம் சேவையில் உள்ள இருவருடன் மேலும் இருவர் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் தொகுதி தொகுதியாகச் சென்று பாடசாலைகளின் ஆங்கிலத் தரம் பற்றி ஆராய்வதுடன், சேவைக் காலப் பயிற்சி வகுப்புகளையும் கூடுதலாக நடத்தத்திட்டமிட்டுள்ளனர்.

(இ-68)

## ஷெல்லினால் சேதமான வீடுகளைத் திருத்த நோராட் உதவும்

ஷெல்லடியால் சேதமடைந்த காரை நகர் கடற்றொழிலாளர்களது வீடுகளைச் செப்பனிட 84ஆயிரம்ரூபாவை நோர்வே நொராட் நிறுவனம்அன்பளிப்புச் செய்துள்ளது.

1987ஆம் ஆண்டு முற்பகுதியில் காரைநகர் கடற்படைத் தளத்திலிருந்து ஸ்ரீலங்கா கடற்படையினால் ஏவப்பட்ட ஷெல்களினால் சேதமடைந்த காரைநகர் மடத்துவெளி மீனவர்களதுவீடுகளைச் செப்பனிடவேஇப் பணம் பயன்படுத்தப்படுகின்றது.

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் மேற்படி நிறுவனத்திடம் நிதி உதவி கேட்டு விடுத்த வேண்டுகோளின் பயனாகவே இந்த உதவி கிடைக்கிறது. (இ120)






Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### சூடுபட்டு மரணம்

படையினரால் மீண்டும் கைது செய்யப்பட்ட தச்சுத் தொழிலாளி ஒருவர் ஓரிரு நாட்களால் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக உறவினர்களிடம் கையளிக்கப்பட்டார்.

கல்லடி உப்போடை வாசியான எஸ். பிரபாகரன் (18 வயது) என்ற இந் நபர் கல்லடியில் கைது செய்யப்பட்டார்.

சில மாதங்களுக்கு முன்பு படையினரின் பாதுகாப்பிலிருந்து தப்பி ஓடியவர் என தெரிய வருகிறது. (இ-21)

# மூதூரிலிருந்து இடம்பெயர்ந்த 1,000 முஸ்லிம் குடும்பங்கள்

## அமைதிப்படையால் மீளக் குடியமர்வு

### உணவுப் பொருள்களும் விநியோகம்

திருகோணமலை ஆக 5

நான்கு மாதங்களாக அரசாங்கத்தால் எதுவித உதவிகளும் பெறுமல் வாழ்ந்துவந்த முஸ்லிம் அகதிகளுக்கு இந்தியப்படையினர் உணவு வகைகளை வழங்கியுள்ளனர்.

மூதூரிலிருந்து இடம் பெயர்ந்து கிண்ணியாவில் அகதிகளாக வாழ்ந்துவந்த சுமார் 1000 குடும்பங்களுக்கு இந்த உதவிகளை இந்தியப் படையினர் செய்துள்ளனர்.

இந்த அகதிகளின் பரிதாப நிலை இந்தியப் படை அதிகாரியான கேர்ணல் ஏ. எஸ். ஜில் என்பவரிடம் எடுத்துக் கூறப்பட்டதை அடுத்தே அவர் உடனடியாக 15 மூடைகள் அரிசி, 4 மூடைகள் பருப்பு, 2 மூடைகள் சீனி ஆகியவற்றை வழங்கினுர்.

இந்த அகதிகள் பற்றிய விவரங்கள் யாவும் அரசாங்க அதிபரிடம் அந்த அதிகாரியால் எடுத்துக் கூறப்பட்டன.

அகதிகளுக்குரிய 2000 ரூபா உட்பட வேறு உதவிகளையும் அவர் பெற்றுக்கொடுத்துள்ளார்.

இக்குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளன.

இந்தியப் படையினரின் கப்பலில் அவர்கள் மூதூருக்குக் கொண்டு செல்லப்பட்டு மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்த அகதிகளில் ஒருவரின் காரும் சப்பலில் மூதூருக்கு ஏற்றி அனுப்பிவைக்கப்பட்டது. (இ-150)

### மக்கள் முகம்

#### அல்லாரை சாரணர் சங்கம்

கொடிகாமம் ஆக 5

அல்லாரை சாரணர் சங்க நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர் - ஆசிரியர் திரு. கா. கணபதிப்பிள்ளை உபதலைவர்கள் திரு. க. குகநேசன், திரு. கா. க. குகதாசன், திரு. த. தியாகராசா. செயலாளர் திரு. ப. கோமேஸ்வரன். உப செயலாளர்கள் திரு. மா. சிவசுப்பிரமணியம். திரு. கே. சரவணபவன்.

போஷகர்கள் திரு. க. கோபாலகிருஷ்ணன் திரு. சோ. கணேசலிங்கம் திரு. அ. பொ. செல்லையா. (இ-75)

# பாடசாலை நாட்களை அதிகரிக்க வேண்டும்

## கொத்தணி அதிபர் உரை

பண்டத்தரிப்பு, ஆக.5

அமைதியான சூழ்நிலையில் குறைந்த நாட்களில் நிறைந்த கல்வியைப் புகட்டலாம். அசம்பாவிதங்கள் உள்ள இன்றைய காலகட்டத்தில் அவ்வாறு செய்ய முடியாது. எனவே எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட எமது எதிர்கால சந்ததியின் கல்வி சிறப்படைய நாம் பாடசாலை நாட்களைக் கூட்டிக் கொள்ள வேண்டும். அதற்காக தவணை விடுமுறைகளைப் பயன்படுத்தவேண்டும்.

வட்டுக்கோட்டை கொத்தணி பாடசாலை அதிபர்களின் கூட்டத்துக்குத் தலைமைவகித்து உரையாற்றிய கொத்தணி அதிபர் திரு. என். வேலுப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினுர்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

இன்று எமது கல்வித் துறையில் ஒரு புதிய நலன்தரும் முறையை நடைமுறைப் படுத்துகின்றோம். தொடர்மதிப்பீட்டு முறைதான் அது.

நமது பிள்ளைகள் நல்ல முன்னேற்றம் காண, மதிப்பீட்டு முறைச் செயற்பாட்டுக்கு நிறைய நேரம் தேவை.

மாணவர் இடர்தீர்க்கவும் அவர்களை வழி நடத்தவும் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் அவகாசம் அதிகம் தேவை.

நாம் இந்த நிலையில் சமாதானத்தைப் போல 180 நாட்களோ, 185 நாட்களோ பாடசாலைகளை வைத்தால் போதும் என்று எண்ணுது இருநூறு நாட்களோ அன்றி அதற்கு அதிகமாகவோ பாடசாலைகளை வைத்து கல்வியை மேன்மையுற வளர்க்கவேண்டும்.

இப்படி அவர் கூறினுர்.

கொத்தணி அதிபர்கள் சங்கச் செயலாளர் திரு. வி. ஏகாம்பரமூர்த்தி நன்றி நவின்றுர். (இ-120)

### நடுக்கடலில் தத்தளித்த குமுதினிப்படகு

நெடுந்தீவு, ஆக. 5

பிரயாணிகளுடன் நெடுந்தீவில் இருந்து குறிகட்டுவானை நோக்கிச் சென்று கொண்டிருந்த அரச மோட்டார் படகு குமுதினி கடலில் தத்தளித்தது. ''புறப்பலர்'' என்னும் உந்துவிசை கழன்றதாலேயே இந்நிலை ஏற்பட்டது.

பழுதடைந்த இப் படகு மிகவும் மெதுவான வேகத்தில் பின்னர் குறிகட்டுவானைச் சென்றடைந்தது. (இ- 111)

## கோக்குவில் ஞானபண்டித வித்தியாசாலையில் சமயவிழா

யாழ்ப்பாணம், ஆக 5

கொக்குவில் ஸ்ரீஞானபண்டித வித்தியாசாலையில் நடைபெற்ற சமய வாரவிழாவில் இலங்கையின் திருமூலர் சங்கத் தலைவரும் திருமந்திரத்தில் பதினைந்து ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்பவருமான சமயப் பெரியார் திரு. எஸ், இராமநாதன் அவர்களின் சொற்பொழிவு இடம் பெற்றது.

மாணவர் மனதை ஈர்க்கும் வகையில் 'தன்னை அறிவதே கல்வி' என்பதை இவர் தனது சொற்பொழிவில் விளக்கினுர்.

அதிபர் கா. கணேசதாசன் வைபவத்துக்குத் தலைமை வகித்தார்.

பொறியியலாளரும் திருக்குறள் மன்றத் தலைவருமான பெரியார் ஏ. என். யோகநாதனும் உரையாற்றினுர்.

தொடர்ந்து பேசிய டாக்டர் எஸ். மாணிக்கராசா, ''ஓம்'' எனும் மந்திரத்தின் உண்மைப் பொருளையும் திருமந்திரத்தின் சுருக்கம் என்பதையும் இயம்பினுர்.

பாடசாலை ஆசிரியர் திருமதி ப. பத்மநாதன் பெரியார்களுக்கு நன்றியுரை வழங்கினுர். (இ)

### திருமலை வந்த 107 குடும்பங்கள்

திருகோணமலை, ஆக 5

இந்தியாவிலிருந்து மன்னுர் வந்து சேர்ந்த அகதிக் குடும்பங்களில் திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த 107 குடும்பங்கள் திருமலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

364 உறுப்பினர்கள் அடங்கிய இந்தக் குடும்பங்களுக்குத் தேவையான உதவிகளை இந்தியப்படையினர் செய்து கொடுத்து அவரவர் இடங்களுக்கு அனுப்பி வைத்தனர். (இ-150)

பல்கலைக்கழகத்துக்கு இம்முறை தெரிவாகி

# சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் ஆங்கில பயிற்சி பெறுவோர் விவரம்

யாழ்ப்பாணம், ஆக. 5

இவ்வருடத்தில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கு விசேஷ ஆங்கிலப் பயிற்சி வழங்கப்படுகின்றது அதற்காக ஆறு நிலையங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஆறு நிலையங்களிலும் கற்பதற்கு தெரிவான மாணவர் பட்டியல் உதயனில் தொடர்ந்து வெளியிடப்படுகிறது. இன்றுடன் பட்டியல் பூர்த்தியாகின்றது.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி பயிற்சி நிலையத்தில் ஆங்கிலம் பயில இடம் ஒதுக்கப்பட்ட மாணவர் விவரம் வருமாறு;—

**பொறியியல் !**

1. என். கே. சந்திரசேகரன் மீசாலை. 2. வி. சி. சர்வானந்தன் வறணி. 3. என், உதயகுமார் சாவகச்சேரி. 4. பி. விக்தியபாஸ்கரன் மீசாலை.

**பௌதிக விஞ்ஞானம்**

1. ப. பாலேந்திரன் சாவகச்சேரி. 2. வி. பாஸ்கரன் எழுதுமட்டுவாள். 3. எஸ். ஞானபர்வதன் கைதடி. 4. ஆர். கிரிஜா கைதடி. 5. ரி. முருகதாஸன் சாவகச்சேரி. 6. எஸ். பரம்தில்லைராஜன் சாவகச்சேரி.

7, ஆர். எஸ். பிரபன் சாவகச்சேரி. 8. கே. சிவனேசன் எழுதுமட்டுவாள். 9. கே. திருலோகநாதர் பளை, 10. வி. என். வரதகுமார் மீசாலை.

**விவசாயம்**

1. ஆர். கோமதி சாவகச்சேரி. 2. எஸ். தனலிங்கம் எழுதுமட்டுவாள்.

**கலை வர்த்தகம்**

1. எஸ். என் ஆதிரை சாவகச்சேரி. 2. எஸ். அற்புதரட்ணம் சாவகச்சேரி, 3. எஸ். கே. பாமினி சாவகச்சேரி. 4. பி. பவானி சாவகச்சேரி. 5. எஸ். கௌரிதேவி சாவகச்சேரி. 6. என். கலாஜினி சாவகச்சேரி,

7. கே. கருணுகரன் மருதங்கேணி. 8. எஸ். எஸ். கருணுநிதி கொடிகாமம் 9. எம். எ. கயல்விழி மீசாலை. 10. எஸ். வி, வி, குமாரவேற்பிள்ளை வறணி 11. எ, குணுநந்தினி கொடிகாமம் 12. எஸ். லலிதாதேவி கொடிகாமம்.

13. கே. மாலினி சாவகச்சேரி. 14. எ. மல்லிகாதேவி 15. எம்; ரி. ஆர் மரியாதாப் எழுதுமட்டுவாள். 16. ரி கே. நேசகுமாரி சாவகச்சேரி. 17. எஸ், ஆர், நிரஞ்சன் சாவகச்சேரி, 18, எஸ் ஆர் நிர்மலாதேவி சாவகச்சேரி. 19, எஸ், பிரேமிலா மிருசுவில்,

20, எம், எல், பிரியந்தினி மிருசுவில் 21. ரி. பிரேமலதா மிருசுவில் 22. என். ராஜமலர் மீசாலை. 23. ரி. ராஜன் மீசாலை, 24. என் சரஸ்வதி சாவகச்சேரி. 25. ஜே. எம். சாமினி, 26. எஸ் எம். சாந்தரூபி சாவகச்சேரி.

27. எஸ் சிவகுமார் மிருசுவில் 28. ரி. என். சிவனேஸ்வரி கொடிகாமம் 29 வி. சிறிமதி சாவகச்சேரி 30. ரி. சுபாஜினி புத்தூர் 31. ரி. சுவித்ரா சாவகச்சேரி 32. எ. எம். எஸ். சுரேசினி மிருசுவில்.

33. எல். எஸ். சுவர்ணு சாவகச்சேரி 34. ஐ. வதனி சாவகச்சேரி 35. ஒ. விஜயரூபன் மிருசுவில் 36. பி. விமலா வறணி 37. எஸ். யோகேஸ்வரி மீசாலை 38. கே. மேகலா சாவகச்சேரி 39. கே. நிர்மலா சாவகச்சேரி,

40. ஆர். நித்தியானந்தன் மீசாலை 41. என் பிரணவன் மீசாலை 42. சி. தவேந்திரன் சாவகச்சேரி 43. கே. பாலகிருஷ்ணன் சாவகச்சேரி 44. என். கலைச்செல்வி மீசாலை 45. ரி. மனோரஞ்சினி சாவகச்சேரி 46 பி பிரேமாவதி சாவகச்சேரி 47. கே. சிவபாமா மிருசுவில் 48. ஆர். அருட்செல்வம் கொடிகாமம் 49. ரி. ஞானசெந்தன் கைதடி.

**உயிரியல் விஞ்ஞானம்**

1. எஸ். கே. அருள்மொழி மீசாலை 2. என் பவானந்தன் சாவகச்சேரி 3. ஜி. ஜி. ஜொஸ்பின் சாவகச்சேரி 4. எ கல்யாணி சாவகச்சேரி 5. கே. கலோசனு சாவகச்சேரி.

**மருத்துவம்**

1. எ. தமயந்தி சாவ

(5ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சியிலிருந்து தெரிவான மாணவருக்கும் ஆங்கிலப்பயிற்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஆக.5

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து 20 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகியுள்ளனர்.

அவர்களுக்கான ஆங்கிலப் பயிற்சி வகுப்பு கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் தற்போது நடைபெறுகின்றது.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை இவ்வகுப்புகளுக்குச் சமுகந்தருமாறு வவுனியா, கிளிநொச்சிமாவட்டங்களின் கல்விப்பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

**தெரிவானேர் விவரம்:**

மருத்துவம்:- 1. வி. கணபதிப்பிள்ளை, 2. ரி. விக்னேஸ்வரன்,

எந்திரவியல்:- 3 எஸ் கே. இந்திரகுமார், 4. ரி. ஷண்முகம்.

உயிரியல் விஞ்ஞானம்: 5. எம். சருணுகரன், 6. என். யோகேஸ்வரி.

பௌதீக விஞ்ஞானம்: 7. பி. பிரபாகரா.

விவசாயம்:- 8. டி. சேதுபதி.

முகாமைத்துவம்:- 9. எஸ். ஷண்முகநாதன், 10. கே. விக்னராஜா.

வர்த்தகம்:- 11. என். என். கென்யூட்ஜன், 12. கே. சத்தியசீலன்.

சட்டம்:- 13. கே. எம். ராஜேஸ்வரன்.

கலைப்பிரிவு: 14. ஏ. ஆர். மதிவதனி, 15. பி. நகுலினி, 16. எஸ். பூலோகராஜா, 17. ரி. புஸ்பகலா, 18. ஆர். ராதா, 19. பி. ஸ்ரீவாணி 20. ரி. தவராஜா. (இ)

# நான் என்ன செய்ய வேண்டும்? தொண்டர்களே சொல்லுங்கள்!

## நெடுஞ்செழியன் கேட்கிறுர்

சென்னை, ஆக. 4

நெடுஞ்செழியனுக்கு பிரதமர் ராஜீவ் காந்தியும், தி. மு. க. தலைவர் கருணுநிதியும் பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

நெடுஞ்செழியனின் 69ஆவது பிறந்த நாள் விழா, அவரது வீட்டில் தடபுடலாக நடந்தது. காலையில் பெரியார், மணியம்மை, அண்ணு, எம். ஜி. ஆர். ஆகியோரின் சமாதிகளுக்குச் சென்று நெடுஞ்செழியன் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினுர்.

பெரியார், அண்ணு சிலைகளுக்கு மாலை அணிவித்தார். அவருடன் பண்ருட்டி ராமச்சந்திரன், திருநாவுக்கரசு. சேலம் கண்ணன் ஆகியோரும் சென்று வந்தனர்.

பின்பு நெடுஞ்செழியன் பிறந்தநாள் கேக் வெட்டினுர். அதில் ஒரு துண்டை எடுத்து மனைவி விசாலாட்சிக்கும், பேரன், பேத்திகளுக்கும் ஊட்டினுர்.

ஏராளமான கட்சிப் பிரமுகர்களும், அரசு அதிகாரிகளும் வந்திருந்து துண்டுகளையும், மாலைகளையும் நெடுஞ்செழியனுக்கு அணிவித்தனர். பின்னர் நிருபர்கள் அவரைச் சந்தித்தனர்

கேள்வி: யார் யாரிடமிருந்து பிறந்ததின வாழ்த்து வந்துள்ளது?

பதில்: அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலாளர் ... வாழ்த்துத் தெரிவித்தார் ... பிரதமர் ராஜீவ் காந்தி வெளிநாட்டில் இருக்கிறுர். எனவே அவர் சார்பில் வாழ்த்துத் தெரிவிப்பதாக சொன்னுர். தி. மு. க. தலைவர் கருணுநிதியிடம் இருந்தும் வாழ்த்துக் கடிதம் வந்துள்ளது.

கே: கருணுநிதி அனுப்பி உள்ள வாழ்த்துக் கடிதத்தின் வாசகங்கள் என்ன?

ப: அதை வெளியில் சொல்லவேண்டியதில்லை.

கே: லாயிட்ஸ் சாலையில் உள்ள அ. தி. மு. க (ஜெ) கட்சி தலைமை நிலையத்துக்குச் செல்வீர்களா?

ப: நான் எதற்கு அங்கே போகப் போகிறேன் இப்போது இங்கு தான் இருக்கிறேன். அமைதியாக இருக்கின்றேன். அடக்கமாக இருக்கிறேன்.

கே: அடுத்து என்ன செய்யப் போகிறீர்கள்?

ப: பொறுமையாக இருந்து வருகிறேன். கட்சித் தொண்டர்களுக்கு நான் எந்த ஆணையும் இடப்போவதில்லை. நான் என்ன வழியைப் பின்பற்ற வேண்டும் என்பது பற்றி கட்சித் தொண்டர்களே முடிவு எடுத்து எனக்குச் சொல்லட்டும். தெளிவான ஒரு முடிவு எடுக்கப்பட்ட பிறகு அதனை நான் பொதுமக்களுக்கும், மற்றவர்களுக்கும் முறைப்படி தெரிவிப்பேன். அது ... இப்படியேதான் ... நெடுஞ்செழியன் பதில் அளித்தார்.

பின்பு நிருபர்கள் பண்ருட்டி ராமச்சந்திரனை சந்தித்தனர்.

''நெடுஞ்செழியனின் பிறந்த நாளாகப் பார்த்து ஜெயலலிதா தனது கட்சிப் பத்திரிகையின் வெளியீட்டு விழாவை நடத்துகிறுரே இதற்குக் காரணம் என்ன?'' என்று அவரிடம் கேட்ட போது, ஜெயலலிதாவிடமே கேட்பதை விட்டு விட்டு வழியில் போகும் என்னிடம் கேட்கிறீர்களே? என்று பண்ருட்டி பதில் அளித்தார்.

திருநாவுக்கரசை நிருபர்கள் சந்தித்தபோது, 'நிலைமைகளை உன்னிப்பாகக் கவனித்து வருகிறோம். கட்சிநடப்பைக் கவனித்த பின்பு இன்று எங்கள் தரப்பின் கருத்துக்களைத் தெரிவிக்கிறோம்' என்று அவர் தெரிவித்தார்.

''அரங்கநாயகம் குழந்தைவேலு ஆகியோர் கோவைத்தம்பி ஆகியோர் கோவையில்இருக்கின்றனர். கோவைத் தம்பி காலையில் தான் போனில் என்னுடன் பேசினுர்' என்றும் திருநாவுக்கரசு கூறினுர்.

'முன்னுள் அமைச்சர் திருச்சி சவுந்தரராஜன் உங்களைக் கடுமையாகத் தாக்கிப் பேசி இருக்கிறுரே' என்று கேட்ட போது, அந்த இடத்திற்குச் சென்று இருக்கும் போது அங்குள்ள சூழ்நிலைக்கு ஏற்ப பேசுவது சகஜம்தான். எனவே அதை நான் பெரிது படுத்தவில்லை' என்றுர் திருநாவுக்கரசு.

பிறந்தநாளையொட்டி நெடுஞ்செழியன் வீட்டிலும், கிரீன்வேஸ்சாலையிலும் தோரண அலங்காரங்கள் செய்யப்பட்டு இருந்தன. (எ-4)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் கஸ்பார் அன்ரன்

உரிமையாளர்: சுன்னுகம், அன்பன்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ், வசந்தபுரம் – கோழி பண்ணை, சென். ரேக் ஆட்டா சேவிஸ்)

ஈழமண்ணில்: 14-7-1950

தமிழக மண்ணில்: 6-7-1988

திரைகடல் மீதோடித் திரவியம் தேடினீர்
திசையிலா நின்றவர்க்கு திருக்கர மீந்தீர்
இரக்கின்ற ஏழைகள் இனியாரு அன்ரனை
இவ்வுலகில் எப்போ இனிக்காணப் போகிருரையா!

அன்ரனவர் மாண்டனரோ என்றறிந்ததும்
அனைத்து நண்பர்களும் வீடு வந்தனரே
தென்றலதாய் வீசிய நீவிர் புயற்காற்ருய்
தென்னகத்து விண்ணதனில் திரிகின்றீரோ!

நீர் சென்ற பின்னுலே நம் செல்வ மக்கள்
நீர்வற்றக் கண்ணீரால் சொரிந்து நிற்கின்றுர்!
ஆர் இனி எங்களுக்கு என்று தான் அரற்றும்
அன்னையவள் பிலோமினுவும் என்னதான் செய்வாள்?

நீத்தவுடல் கொண்டு வந்து கடமைகள் செய்தோம்
நீரின்றி வையமதில் மனைவி, மக்கள்
பார்த்துள்ளார் மீண்டும நீரிங்கு வந்திடவே
பகவனருள் வேண்டி வந்து தோன்றுவீரோ?

உமது பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், உற்றுர், நண்பர்கள்.

(இன்று காலை 6-15 மணிக்கு யாழ்-புனித ஆரோக்கியநாதர் ஆலயத்தில் அன்னுரது ஆத்ம சாந்திக்காக இரங்கல் திருப்பலி பூசை ஒப்புக் கொடுக்கப்படும்)

23/4, பாக் ரோட்,
குருநகர், யாழ்ப்பாணம். (C-6019)

# நான்காவது நினைவஞ்சலி



தோற்றம்:- 5-6-1955

மறைவு:- 5 8- 1984

### திரு. சங்கரன் மனோகரன்

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காயும், வழிகாட்டியாயும் திகழ்ந்து எங்களை ஆருத் துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எமது அன்புத் தெய்வமே! உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பெற்ரோர், சகோதரர்கள், சகோதரி, அண்ணிமார் மற்றும் குடும்பத்தினர்.

57, விக்டோரியா றோட்,
யாழ்ப்பாணம். (5581)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாம் கற்ற
மிக்காருள் மிக்க கொளல்.

**பொருள்:**

கற்றவரின்முன் தாம் கற்றவைகளை அவருடைய மனத்தில் பதியுமாறு சொல்லி, மிகுதியாகக் கற்றவரிடம் அம்மிகுதியான கல்வியை அறிந்து கொள்ள வேண்டும்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073

05-08-1988 த. பெ. இல. 23


## கபளீகரக் கபடம்!

வடக்கு கிழக்கில் இப்போது குடியேற்றம் நடப்பதாகக் கூறப்படுவது தவறு. வன்செயல்களால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்தும் பணிகளே இப்போது நடக்கின்றன. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கூட மீளக்குடியமர்த்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வசதி செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வாறு ஸ்ரீலங்காவின் ஆட்சி அதிபதியான திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன இந்தியச் செய்தி நிறுவனத்துக்கு அளித்த விசேட பேட்டி ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

முழுப் பூசினிக்காயை, வாழை இலையில் படைக்கப்பட்ட சோற்றுக்குள் புதைக்க எடுக்கப்படும் இந்தப் பெரிய இடத்து முயற்சி வேடிக்கையானது; வேதனைக்கு உரியது.

''இன வன்செயல்களினாலோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ இடம் பெயர்ந்தோர் இந்தச் சர்வஜன வாக்கெடுப்பில் வாக்களிக்க உரிமை உடையவர்கள். அவர்கள் பழைய இடங்களுக்குத் திரும்புவதற்குத் தேவையான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டும்''

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் ஆறாவது சரத்தின் மூன்றாவது அம்சம் இது வாகும்.

மீளக் குடியமர்த்தும் பணிகள் குறித்து ஒப்பந்தத்திலும் உள்ளது என்று ஜனாதிபதி குறிப்பிட்டது இதனைக் கருத்தில் கொண்டு தான்.

ஒப்பந்தத்தில் மொத்தம் பதினான்கு சரத்துக்கள் உள்ளன. அவற்றில் ஒன்று தானும் இன்னும் அமுல் செய்யப்படவில்லை. அதற்கான ஆரம்ப முயற்சி தானும் மேற்கொள்ளப்படவில்லை.

வடக்கு-கிழக்கு இணைந்த மாகாணசபைக்குத் தேர்தல் நடந்த பின்னர் இணைப்பை நிரந்தரமாக்குவதா இல்லையா என்பதை அறியத்தான் சர்வசன வாக்கெடுப்பு இடம் பெயர்ந்தோர் அந்தச் சர்வசன வாக்கெடுப்பில் கலந்து கொண்டு வாக்களிக்கும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பது தான் ஒப்பந்தச் சரத்து.

வடக்கு-கிழக்கு இணைந்த மாகாண சபைத் தேர்தலை நடத்தும் சூழ்நிலை இன்னும் ஒரு சதவீதம் தானும் உருவாகவில்லை. அந்தச் சூழ்நிலையைத் தோற்றுவிக்க உதவக்கூடிய வடக்கு-கிழக்கு இணைப்புப் பிரகடனத்தை வெளியிடத் தானே பின்னடிக்கிறார் ஜனாதிபதி.

'அ' வை எழுதவே தொடங்காமல், ''ஃ'' வை எழுதுகிறார் ஜே. ஆர்.

அதுவும் குடிபெயர்ந்தவர்கள் திரும்புவதற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்குப் பதிலாக, அவர்களை குடியமர்த்தும் வேலையைத் தானே பொறுப்பேற்று நடத்துகிறார். அரசாங்கமே முன்னின்று நடத்துகிறது.

ஒப்பந்தப்படி நடக்கும் கனவானாக இருந்தால், ஜனாதிபதி, இடம் பெயர்ந்த சிங்களவர்களை மட்டும் தமிழ்ப் பகுதியில் குடியமர்த்துவது ஏன்?

திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய இடங்களிலிருந்து குடிபெயர்ந்த எத்தனை தமிழர்களை அரசு இதுவரை மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுத்தது?

அதற்கு மாறாக—

தமது சொந்தக் கிராமத்துக்குத் தமது சொந்தத்திலேயே திரும்பும் தமிழர்களுக்கு அரசு தனது கையாட்களை வைத்துத் தொல்லைகளைக் கொடுக்கிறது. கையாட்களைக் கொண்டு விரட்டவும் முயற்சிக்கிறது.

இந்த லட்சணத்தில், ஒப்பந்தப்பிரகாரம் கிழக்கில் சிங்களவர்கள் மீளக் குடியமர்த்தப்படுகிறார்கள் என்று ஆட்சிப் பெரியவர் நிலைநாட்ட முனைவது சுத்த அபத்தம். மற்றவர்களை ஏமாற்றக் கூறும் புரட்டு அன்றி வேறு எதுவுமல்ல.

உண்மையைச் சொல்வதானால் —

தமிழர் மண்ணை, திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தினால், அரசு உதவிடும் குடியேற்றத் திட்டத்தினால், கபளீகரம் செய்யும் கபட நடவடிக்கையே இப்போது கிழக்கில் நடக்கிறது. அதனை வெளி உலகத்துக்கு மறைத்து ஒப்பந்தத்தின் போர்வைக்குள் மறைத்து எல்லோரையும் மடையர்கள் ஆக்கும் ''கெட்டித்தன''த்தை நிரூபிக்கப்பார்க்கிறார் இந்த நாட்டின் ஜனாதிபதி! அவ்வளவுதான்!!

## நட்சத்திரப் போர் திட்டம்

வாஷிங்டன், ஆக. 4

ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் றேகனின் நட்சத்திரப் போர்த் திட்டத்தைத் தொடர்ந்து அமுல் நடத்தப்போவதாக குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான ஜோர்ஜ் புஷ் அறிவித்திருக்கிறார்.

தற்போது திரு. புஷ், உபஜனாதிபதியாக பணிபுரிகிறார். (எ)

# சதி வெற்றி பெருது; சரித்திரம் மன்னிக்காது!

# நாவலர் கோஷ்டி மீது ஜெயலலிதா தாக்கு!!

சென்னை ஆக. 4

துரோகிகள் என் முதுகில் குத்தி விட்டார்கள். என்று ஜெயலலிதா எம். பி. அறிக்கை விடுத்துள்ளார்.

### பிளவு

அ. தி. மு. க. ஜெயலலிதா அணியில் பிளவு ஏற்பட்டு உள்ளது.

நெடுஞ்செழியன், பண்ருட்டி ராமச்சந்திரன், திருநாவுக்கரசு, அரங்கநாயகம் ஆகிய மூத்த தலைவர்கள் வெளியேற்றப்பட்டு விட்டனர்.

அவர்களைத் தாக்கி ஜெயலலிதா ஒரு அறிக்கை வெளியிட்டு உள்ளார்.

அதில் அவர் கூறி இருப்பதாவது:-

### சதித்திட்டம்

''ஜூலை மாதத்துக்குள் பொதுத் தேர்தல் வந்து விடும். அதிக இடைவெளி கொடுக்காமல், எதிரணிகள் மக்களை அணுகுமுன், தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்யுங்கள்- பொதுக்கூட்டங்களில் பேசுங்கள் புரட்சித்தலைவர் ஆட்சி அமைப்போம்'' என்று என்னை உசுப்பிவிட்டு, திரை மறைவில் சில சதிகாரர்கள் சதித்திட்டம் தீட்டி அதை செயல்படுத்த திட்டமிட்டிருந்தார்கள்.

சமயம் பார்த்து என் முதுகில் குத்தும் திட்டம் தீட்டியவர்களின் சதி, சரியான நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டு. அச்சண்டாளர்களின் ரகசிய திட்டம் வெட்ட வெளிச்சத்திற்கு வந்துவிடவே மிரண்டு போயுள்ளனர்.

பொறியில் சிக்கிய எலியாக'' வகை தெரியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். நிழல் தேடி ஓடப் பார்க்கிறார்கள். சகார பாலைவனத்தில் நிழல் கிடைக்காது.

### மூன்றெழுத்து

அடக்கம் காரணமாகவும் கட்சியின் நலன் கருதி சில ரகசியங்களை காப்பாற்ற வேண்டிய சட்டாயத்தினாலும் நான்அமைதிகாப்பதைப் பயன்படுத்தி, தினந்தோறும் பொய்களைச் சொல்லி நாளும் கட்சித் தொண்டர்களை குழப்புவதோடு, கழக முன்னணியினரை எல்லாம் மிரட்டுகின்ற வேலையில், பிரித்தாளும் சூழ்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

டில்லியில் 'இனிமேல் ஜெயலலிதாவிற்கு செல்வாக்கு இல்லை. இனி நான் சொன்னால்தான் எதுவும் நடக்கும். என் பேச்சைக் கேட்காவிட்டால் மூன்றெழுத்திடம் ('சி பி.ஐ.') வசமாகச் சிக்கிக் கொள்வீர்கள் ஜாக்கிரதை' என்ற நேர்முக - மறைமுக மிரட்டல்களில் ஈடுபட்டு அதற்கு நம்மவர்கள் சிலர் பலியாகி விட்டிருக்கிறார்கள்.

### பலவீனமா?

போயும் போயும் ஒரு பெண்ணை, அதுவும் எம். ஜி. ஆர். இருந்த வரை கைகட்டி, வாய் பொத்தி கிடந்தவர்கள் இப்படி எதிர்க்கிறார்களே? இது நியாயமா? தர்மமா? தெய்வத்திற்கே அடுக்குமா? என்று எண்ணற்ற தாய்மார்கள் பொதுமக்கள் பேசுவதை நான் அறியாமல் இல்லை.

இவற்றை எல்லாம் உணர்ச்சி வசப்பட்டு அவர்கள் மீது, 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்று எந்த நடவடிக்கையும் எடுக்க விரும்பாததாலேயே இத்தனை நாளும் பொறுமை காத்து வந்திருக்கிறேன்.

என்னுடைய பொறுமையை அவர்கள் பலவீனமாகக் கருதுகிறார்கள் என்பதை நாம் உணராமல் இல்லை. 'இன்னும் ஏன் இவர்களை வைத்திருக்க வேண்டும். தூக்கி எறிய வேண்டியதுதானே' என்று லட்சக்கணக்கான தொண்டர்கள், நேரிலும் கடிதம் மூலமும், பட்டிதொட்டிகளிலும் பேசுவதை நான் அறியாமல் இல்லை.

### உடைக்க முயற்சி

'ஜெயலலிதாவிற்கு இனி புதுடில்லியில் செல்வாக்கு இல்லை. மூன்று எழுத்துகாரர்கள் வித்தை காட்ட தொடங்கி விட்டார்கள். அடிப்பார்கள், உதைப்பார்கள்! ஆகவே என் பேச்சை கேளுங்கள். நீங்கள் தவறான முறைகளின் சேர்த்து வைத்துள்ள சொத்துசுகத்தை இழக்காமல்காப்பாற்றிக் கொள்ள என்னோடு வந்து விடுங்கள். இயக்கம் காண்போம்; புதிய உறவு கொள்வோம்; கூட்டாக புதிய ஆட்சியை காண்போம்'என்ற போலி உத்தரவாதங்களை, பேராசைகளைக் காட்டி புரட்சித் தலைவரின் கழகத்தை ஒருசிலர் சுயநலத்திற்காக இரண்டாவது முறையும் உடைக்கப் பார்க்கிறார்கள்.

இவர்களின் போக்கு எப்படி இருக்கிறது என்பதை ஆர அமர எண்ணிப் பார்த்தால் சூது புரியும். அவர்கள்சூழ்ச்சி விளங்கும். அவர்களின் வண்டவாளங்கள் வெளிப்படும்.

### முதுகில் குத்தினர்

என்னுடன் இருந்து கொண்டே என் முதுகில் குடிலர்கள் குத்தியதால் எனக்கு ஏற்பட்ட வேதனையைக் காட்டிலும், புரட்சித் தலைவர் ஆட்சி அமைக்க பட்டபாடு நிறைவேற முடியாமல் உடன் பிறந்தே கொல்லும் வியாதியஸ்தர்களால் தடுக்கப்படுகிறதே என்று எண்ணும் பொழுது எழும் வேதனை வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாக அமைகிறது.

அருந்தொண்டாற்றக் கிளம்பிய அடலேறுகளை அடக்கிஒடுக்கிட கிளம்பி உள்ள அறிவிலிகாள்! உங்கள் சதி வெற்றி பெறாது. சரித்திரம் உங்களை மன்னிக்காது. ஆப்பை அசைத்த குரங்காக நீங்கள் அகப்பட்டு கொள்வது உறுதி.

### போர்

ஒரு சகோதரர், ''போர் நடக்கும்போது, தளபதி ஓய்வு எடுக்கப் போகலாமா?'' என்ற விஷேதமான கேள்வியைக் கேட்டிருக்கிறார்.

எங்கே போர் நடக்கிறது? யாருக்கும் யாருக்கும் யுத்தம்? எனக்குப் புரியவில்லை. நமது கட்சிக்குள் நடப்பதை யுத்தம் என்று அவர் கருதினால் அவர்களைச் சந்திக்க நான் தேவையில்லை. புரட்சித் தலைவரின் தொண்டர்களை, தளபதிகளை முதலில் சந்தித்துவிட்டு, பிறகு வரட்டும். நான் அவர்களை சந்திக்கத் தயாராக இருக்கிறேன் என்பதைமட்டும் மெத்த பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்''.

இவ்வாறு ஜெயலலிதா அறிக்கையில் கூறியுள்ளார்.

### டாக்டர்கள் கட்டளை

மருத்துவ சிகிச்சை பற்றிக்குறிப்பிடுகையில், ''எனக்கு ஏற்பட்டு இருக்கும் உடல் உபாதையில் இருந்து விரைவில் விடுபட்டு, தொண்டர்களைச்சந்திப்பேன்.நீண்ட நாள் என்பது டாக்டர்கள் கட்டளை, விரைவில் என்பது என் ஆசை'' என்று அறிக்கையில் கூறியுள்ளார். (எ-4)

## மத்தியாஸ் றூஸ்ட் நாடு கடத்தப்பட்டார்!

மாஸ்கோ, ஆக 4

மத்தியாஸ் றூஸ்ட் நேற்று மாஸ்கோவில் இருந்து நாடு கடத்தப்பட்டார்.

மாஸ்கோ செஞ்சதுக்கத்தில் விமானம் ஒன்றில் சட்ட விரோதமாகப் போய் இறங்கினதற்காக மேற்கு ஜேர்மன பிரசையான இவருக்கு சோவியத் நீதிமன்றம் 4 ஆண்டு கால சிறைத் தண்டனை விதித்தது.

நேற்று முன் தினம் அவருக்கு மன்னிப்பு அளித்ததுடன் அவரை நாடு கடத்துவதாகவும் சோவியத் அரசு அறிவித்தது.

அதன்படி மேற்கு ஜேர்மன் நகரான பிராங்பேர்ட்டுக்கு சோவியத் எயர்பஸ் விமானம் ஒன்றில் ஏற்றப்பட்டு நாடு கடத்தப்பட்டார்.

பிராங்பேர்ட்விமான நிலையத்தை வந்தடைந்த விமானத்தில் இருந்து 245 ஆவது பயணியாக அவர் கடைசியில் இறங்கினர்.

முத்துஐயன்கட்டில்

## அரச அலுவலகம் முகாமாக மாற்றப்பட்டது

ஒட்டுசுட்டான் ஆக. முத்துஐயன்கட்டுதிட்ட முகாமையாளர் அலுவலகத்தை இந்திய அமைதிப் படையினர் தற்பொழுது தங்களது முகாமாக்கிக் கொண்டுள்ளனர்.

ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்திற்கு சமீபமாக இருந்த திட்ட அலுவலகம் கடந்த வன்செயல் காலத்தில் ஸ்ரீலங்கா படையினரால் உடைக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டது

அதன் பின்பு இடதுகரை குடியேற்ற அதிகாரி விடுதியில் அலுவலகம் இயங்கி வந்தது.

அந்தக் கட்டடத்தையே தற்பொழுது அமைதிப்படையினர் முகாமாக்கி உள்ளனர்.

அத்துடன் அதைஅண்மித்துள்ள பாடசாலையையும் உள்ளடக்கிமுகாமாக்கிவிட்டனர். (ஒ-113)

## காரணமின்றி இளைஞர் கைது

### சிறிமாகுற்றச்சாட்டு

கொழும்பு, ஆக 5

பொலீஸாரும் பாதுகாப்புப் படையினரும் காரணமின்றி இளைஞர்களைக் கைது செய்து வருகின்றனர் இவ்வாறு சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா குற்றம் சாட்டியுள்ளார். (ஒ-எ)

## சட்டத்தரணி சதா மரணமானார்

யாழ்ப்பாணம். ஆக. 5

வாகன விபத்தில் சிக்குண்டு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த சட்டத்தரணி சதா ஸ்ரீ நிவாசன் மரணமானார்.

கடந்த 27 ஆம் திகதி நாவலர் வீதியால் இவர் ஸ்கூட்டரில் சென்று கொண்டிருந்த பொழுது இவருடைய ஸ்கூட்டரும் அமைதிப்படையினரின் வாகனம் ஒன்றும் மோதுண்டு விபத்து நடந்தது.

இதனால் படுகாயமடைந்த இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்து புதன் நண்பகலில் மரணமானார்,

இவரது மரணம் தொடர்பான விசாரணை யாழ். ஆஸ்பத்திரியில் நடைபெற்றது. (ஒ-10)

## மினி சினிமாக்களில் 28 ம் திகதி வரையே காலைக் காட்சி காண்பிக்கப்படும்

யாழ்ப்பாணம்ஆக 5

யாழ். மாவட்டத்திலுள்ள மினி சினிமாக்களில் இம்மாதம் 28 ஆம் திகதி வரை காலை 10.30 மணிக் காட்சி காண்பிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட மினி சினிமா சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள மினி சினிமாக்கள் பாடசாலை நாட்களில் காலைக் காட்சிகள் காண்பிக்கப்படக் கூடாது என அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

ஆனால் தற்பொழுது பாடசாலைகளின் விடுமுறை காலமாதலால் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் 28 ஆம் திகதியின் பின்னர் தொடர்ந்து விடுமுறை நாட்களில் மட்டுமே காலை 10.30 காட்சிகள் காண்பிககப்படும். (ஒ - 9)

திருமலையிலுள்ள

## தமிழ்க் கிராமங்கள் படையினரால் சோதனை

யாழ்ப்பாணம், ஆக. 5

திருகோணமலைமாவட்டத்தில் உள்ள அனேக தமிழ்க் கிராமங்கள் கடந்த செவ்வாய்க் கிழமை இந்திய அமைதிப் படையினரால் சோதனையிடப்பட்டன.

திருகோணமலை— புல்மோட்டை வீதியில் உள்ள கிராமங்களை இவ்வாறு சோதனையிட்ட கிராமங்கள் சோதனையின் போது ஆண்கள், பெண்கள் அனைவரும் குறிப்பிட்ட இடங்களுக்கு அழைக்கப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இச்சோதனை நடவடிக்கை காரணமாக இப்பகுதியூடான வாகனப் போக்குவரத்துக்களும் ஸ்தம்பித்திருந்த தாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஒ-10)

## சமய சந்நிதிகளில்

### அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம் ஆக 5

கோப்பாய் மத்தி அருள்மிகு ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வெள்ளிக் கிழமை ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும்.

இந்த உற்சவத்தின் போது ஒழுங்காகவும் அமைதியாகவும் நடைபெறுவதற்குரிய ஏற்பாடுகளை ஆலய பரிபாலன சபை செய்துள்ளது. (சி)

### காரைநகர் முத்துமாரி அம்பாள் சங்காபிஷேகம்

காரைநகர் ஆக-5

காரைநகர் மணற்காடு அருள்மிகு தேவி கும்பநாயகி ஸ்ரீ முத்து மாரி அம்பாள் கோவில் 1008 சங்காபிஷேகம் எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

இதற்கான ஆரம்ப பூஜைகள் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 2 30 மணி முதல் விநாயக வழிபாட்டுடன் ஆரம்பமாகிறது. (சி)

### நயினை ஸ்ரீ நாகபூஷணி ஆடிப்பூரவிழா

நயினாதீவு ஆக 5

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளுக்கு இலட்சநாம அர்ச்சனையும், ஸ்ரீ சக்கர யந்திர பூஜையும் ஆடிப் பூரத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

இன்று 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 13-ஆம்திகதிசனிக்கிழமை வரை தினமும் காலை விஷேச அபிஷேகமும் பூஜையும் இலட்சநாம அர்ச்சனையும், மாலை ஸ்ரீ சக்கரயந்திர பூஜையும் நடைபெறும்.

14 ஆம் திகதிஞாயிற்றுக்கிழமை ஆடிப்பூரத்தினத்தன்று அம்பாளுக்கு நவோத்தரசஹஸ்திரமகா (1008 சங்குகள்) சங்காபிஷேகம் இடம்பெறும். (சி)

15 ஆம் திகதி ஆரம்பம்:

## தெல்லிப்பழை துர்க்காதேவி வருடாந்த மகோற்சவம்

தெல்லிப்பழை, ஆக. 5

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது,

தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும் இந்த உற்சவத்தில் 25ஆம்திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும். 26ஆம் திகதி காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

இந்த மகோற்சவ காலங்களில் கோவில் முன்பாக அமைந்துள்ள பெருந்தெரு வாசலில் எந்த வாகனத்தையும் நிறுத்தக்கூடாது என்றும் —

தற்காலிக வர்த்தக நிலையங்களை நிறுவுவது தவிர்க்கப்பட வேண்டும் என்றும் —

பெண்களும் குழந்தைகளும் நகைகள் அணிந்து வருவதைக் குறைத்துக்கொள்ளுதல் விரும்பத்தக்கது என்றும் —

கோவில்தரிசனம் முடிந்தவுடன் அடியார்கள் தங்கள் இல்லங்களுக்குச் சென்றுவிடவேண்டும் என்றும்—

இரவுநேரங்களில் எவரும் கோவில் வீதிகளில் தங்குவதோ, பொழுது போக்குவதோ தவிர்க்கப்பட்டு மகோற்சவம் சிறப்பாக நடைபெறுவதற்கு அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் என்றும் ஸ்ரீ துர்க்காதேவி நிர்வாக சபையினர் கோரிஉள்ளனர். (சி)

### சென் ற்றிக்ஸ் பழையமாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக.5

யாழ்சென்பற்றிக்ஸ் பழையமாணவர் சங்க வருடாந்தக் கூட்டம் நாளை சனிக்கிழமை 6 ஆம் திகதி நடைபெறுகிறது

காலை 10 மணிக்கு கல்லூரியில் நடைபெறும் இக்கூட்டத்தில் பழைய மாணவர்கள் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்படுகிறார்கள். (சி)

### ''கசூரினபீச்'' முகாம் அகற்றப்பட்டது

காரைநகர், ஆக. 5

காரைநகர் கசூரினா பீச்சில் அமைதிப்படை முகாம் அகற்றப்பட்டு விட்டது.

இதனைத் தொடர்ந்து வடமராட்சி மீனவர்கள் தங்கள் வழமையான தொழில்களைமேற்கொண்டு வருகின்றனர். (இ 73)

### சாவகச்சேரி...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கச்சேரி 2 என் விஜிதா சாவகச்சேரி 3. ஆர். அருட்செல்வம் கொடிகாமம் 4. ரி. ஞானசெம் தன் கைதடி.

**குவான்டிற்றி சேவயிங் (Quantity Surveying)**

1. கே. நந்தபூபன் சாவகச்சேரி. 2. எஸ். சுவேந்திரன் மிருசுவில்.

**சட்டத்துறை**

ரி. விஜெபா சாவகச்சேரி.

**மிருக வைத்தியம்**

ப. கல்பனா சாவகச்சேரி.

**பல் வைத்தியம்**

எஸ். சிருபன் கைதடி.

(முற்றும்)

(ஒ-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வீட்டுப் பாவனைக்கேற்ற முறையில்
பைக்கட்டுகளில் வறுத்து அரைத்த
அண்ணா மிளகாய்த் தூள்
தொகையாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளுங்கள்.
அண்ணா கோப்பிக் கடை
யாழ்ப்பாணம்.
வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.

# உதயன்

05 - 08 - 1988 வெள்ளிக்கிழமை

பற்களுக்கு உறுதியும் வெண்மையும்
கொடுப்பது
அண்ணா பற்பொடி
அண்ணா பற்பொடி தற்பொழுது மக்களின்
வசதிக்கேற்ப 100 g. பக்கட்டுகளிலும்
வெளிவருகின்றது!
100 g வெற்றுப் பைக்கட்டுகளைச்
சேர்த்துக் கொடுத்து
இனாம் பொருட்களைப் பெற்றுக்
கொள்ளுங்கள்.

## சாம் ஏவுகணை:
## கட்டுக் கதை என்று
### புலிகள் தரப்பில் மறுப்பு

லண்டன், ஆக. 5
நல்லூரில் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து "சாம்-7" ஏவுகணை கைப்பற்றப்பட்டதாக இந்திய அமைதிப்படையினர் கூறுவதை புலிகள் மறுத்துள்ளனர்.

அது ஒரு கட்டுக்கதை என்று புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக பி. பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது.

இந்த ஏவுகணை விவகாரம் பற்றி எங்களுக்கு ஒன்றும் தெரியாது, வெளியார் உதவி பற்றி இந்திய தரப்பினர் கூறுவது இட்டுக் கட்டிய கதை.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பேச்சாளர் ஒருவர் சென்னையில் தெரிவித்தார் என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

அமெரிக்க சி. ஐ. ஏ. யுடன் தொடர்புள்ளவர்கள் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மேல் களங்கம் கற்பிக்கவே, இந்தியா இக்குற்றச்சாட்டைச் சுமத்துகிறது. இக்குற்றச்சாட்டில் உண்மையே கிடையாது'— என்றும் அப்பேச்சாளர் மேலும் தெரிவித்தார் என்றும் பி. பி. ஸி. வானொலி தெரிவித்தது. (அ-எ)

## ஜெயலலிதா......

பொதுச் செயலாளர் பதவியில் இருந்து வெளியேற்றுவதாகத் தீர்மானித்தனர்.

குழுவின் ஏனைய இரண்டு உறுப்பினர்களான எஸ். டி. சோமசுந்தரம், காத்தூர் இராமச்சந்திரன் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

அரசியல் விவகாரக் குழு, செல்வி ஜெயலலிதாவைத் தற்காலிகமாக விலக்குவது என்று தீர்மானித்துள்ளதாக கூட்டமுடிவில் திரு. நெடுஞ்செழியன் விடுத்த அறிக்கையில் தெரிவித்தார். (ஒ-எ)

## தமிழ்க்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
பித்த எமக்கு இது கேள்விக்குறியாக உள்ளது.

★ எம்மத்தியில் உள்ள பலர் 40 வயதிற்கு மேற்பட்டவர்களும், 15 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்களும் திருமணமானவர்களும் நோயாளிகளுமான அப்பாவிகளே. இவர்கள் அனைவரும் உடல் உளரீதியாகப் பெரும் பாதிப்புக்குட்பட்டிருக்கின்றனர். மேலும் வழக்குத் தொடுக்க குற்றங்கள் எதுவுமின்றி விடுதலைக்கு சிபார்சு செய்யப்பட்ட பலரும் இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ளது வேதனைக்குரியதாகும்.

★ எமது விடுதலையைத் தாங்கள் நிறைவேற்றாத பட்சத்தில் நாம் காலவரையறையின்றி அணு அணுவாக இறப்பதைவிட குறுகிய நாட்களில் எம்மையே வருத்தி இறப்பது மேல் என்ற முடிவுடன் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்ள உள்ளோம்.

இந்த மகஜரின் பிரதிகள் பிரதமர், பாதுகாப்பு அமைச்சர், இந்தியத் தூதுவர், மஹரகம எம் பி திரு. தினேஷ் குணவர்த்தன, யாழ். மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (அ-9)

## ஈரோஸ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
மும் வேதனையும் அடைகிறோம். மக்களுக்கு அமைதி, ஜனநாயகம் வேண்டி நடவடிக்கையில் ஈடுபடுவதாக கூறிக்கொள்ளும் இவர்களது புதிய கண்ணோட்டம் இவ்வகையில் தானா வெளிப்படுகிறது?

இந்நடவடிக்கையின் வடிவிலே 30-7-88 அன்று சிற்றாண்டியைச் சேர்ந்த எமது இயக்க உறுப்பினர்கள் சிலரைக் கைது செய்தது சம்பந்தமாகப் பேசுவதற்காக சென்ற மட்டக்களப்பு அம்பாறை பொறுப்பாளர் கிருபாகரனையும் மரபுகளை மீறி கரடியனாறு முகாமில் எவ்வித காரணமுமின்றி தடுத்து வைத்திருக்கின்ற அநாகரிக செயலினால் எமது ஸ்தபனம் அதிருப்திக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றது என்று உள்ளது. (ஒ)

ஷப்ரு கிண்ணம்:
## இன்று ஆட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஆக. 5
ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் "ஷப்ரு" கிண்ணத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன.

முதலாவது ஆட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாக உள்ளது.

முதல் ஆட்டத்தில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மல்லாகம் சிவப்பு நட்சத்திர விளையாட்டுக் கழக அணி மோத உள்ளது. (ஒ-9)

## திருவிழா

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் உற்சவத்தில் இன்று வெள்ளிக்கிழமை இடம் பெறும் கார்த்திகைத் திருவிழாவில் காங்கேசன்துறை லங்கா சிமெந்து நிறுவனத்தினர் வடக்கு வீதியில் உள்ள அன்னதான மடத்தில் அன்னதானம் வழங்க இருக்கின்றனர். (ஒ-68)

## கல்வி மான்.....

மானார்.

வடக்கின் பிரபல கல்விமான்களில் ஒருவரான திரு. சபாலிங்கம் மத்திய கல்லூரியில் ஏழு வருடங்களும், இந்துக் கல்லூரியில் நான்கு வருடங்களும் அதிபராகப் பணி புரிந்தார்.

வாஷிங்டன், பாரிஸ், புதுடில்லி ஆகிய நகரங்களில் நடைபெற்ற கல்வித்துறை சம்பந்தமான கருத்தரங்குகளில் இவர் கலந்துகொண்டு வடக்கிற்குப் புகழ் சேர்த்தவர். வடமாகாண ஆசிரியர் சங்கம், அகில இலங்கை ஆசிரியர் சங்கம் ஆகியவற்றின் தலைவராக இருந்து தொழிற்சங்கத் தொண்டுகளும் புரிந்தார்.

சிறந்த உதைபந்தாட்ட வீரரான இவர் யாழ். மாவட்டத்தின் விளையாட்டுத்துறை அபிவிருத்திக்கும் அரும் தொண்டாற்றியவர். ஜே. எஸ். எஸ். ஏ., ஜே. எவ். பி. ஏ., ஜே ஏ. ஏ. ஏ. ஆகிய விளையாட்டு நிறுவனங்களின் தலைவராக இருந்தவர்.

## கிரிமிச்சைப் பகுதியில்
## டிரக் குடை சாய்ந்தது
### இந்தியப்படையினர் மூவர் பலி

மட்டக்களப்பு, ஆக 5
மட்டக்களப்பு பகுதியில் இந்திய அமைதிப் படையினர் பயணம் செய்த டிரக் வீதியில் குடை சாந்ததால் ஜவான்கள் மூவர் அவ்விடத்திலேயே மரணமானார்கள்.

இச் சம்பவம் வாழைச்சேனை வெருகல் வீதி கிரிமிச்சை என்னுமிடத்தில் கடந்த வார இறுதியில் இடம்பெற்றது.

மேற்படி சம்பவத்தில் மேலும் ஒருவர் காயமுற்றார். (ஒ-21)

## மின் விளக்குகள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கேட்ட கட......கட சத்தத்தினால் எழுந்தேன் 'லைற்றை'ப் போட்ட போது இராணுவத்தினரால் ஹெலிகொப்டரில் இருந்து ஏவப்படும் பரா லைற்றைப்போல வீட்டு லைற்றும் பிரகாசமாக எரிந்தது. நான் அதனை உடனடியாக அணைத்துவிட்டேன்.

தொடர்ந்தும் கட... கட... சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. ஹோலில் ரியூப்லைட் ஒன்றும் தானாகவே எரிந்து கொண்டிருந்தது. ஆவியின் சேஷ்டையாக இருக்குமோ என்றும் ஒரு கணம் நினைத்துக் கொண்டேன். நெஞ்சு பட பட வென்று அடித்துக் கொண்டது என்றார்.

திரு. ரீ, ஞானசிலன் என்பவர் தமது அனுபவம் பற்றித் தெரிவிக்கையில்:-

நள்ளிரவு இரண்டு மணி அளவில் கண் விழித்தபொழுது நைற்லைற் எரியவில்லை.

### இரசாயனமணம்

இதனைஅடுத்து இரசாயன மணம் ஒன்று வீடு முழுவதும் வீசியதை அடுத்து லைற்றைப் போட்டேன்.

அப்பொழுது லைற் வெடித்துச் சிதறியது. எனது மனைவி பயந்து விட்டார் என்றார்.

இந்த மின்வலு அதிகரிப்பு இரவு சுமார் 9-30 மணி முதல் காலை வரை நீடித்தது.

இது தொடர்பாக மின்சாரசபை உத்தியோகத்தர் ஒருவரிடம் வினவிய பொழுது அவர் தெரிவித்ததாவது:

### காரணம்

யாழ்ப்பாணத்தில்முன்னர் நடைபெற்ற ஷெல் தாக்குதல் காரணமாக மின் சம்பிகள் பல சேதமடைந்திருந்தன.

கண்ணுக்குத் தெரியாத வகையிலும் மின் கம்பிகளில் சேதம் ஏற்பட்டிருந்தது.

இதனால் யாழ் ஆஸ்பத்திரிக்கு முன்பாக உள்ள மின் கம்பிகள் சூடேறி 'லைன் நியுட்ரல் அறுந்து 230 கிலோ வாட்ஸ் மின் சக்தி 440 கிலோ வாட்ஸாக அதிகரித்தது.

இதனாலேயே மின்சார சாதனங்கள் சேதமடைந்தன என்றார். (இ-10)

## காங்கேசனுக்கு மா கப்பல்

காங்கேசன் துறை, ஆக 5
பலநாட்கள் இடைவெளிக்குப்பின் காங்கேசன்துறைக்கு மாக் கப்பல் ஒன்று வந்துள்ளது.

"மேர்ச் றிங்கோ" என்னும் கப்பலில் 1000 தொன் மா கங்கேசன் துறை வந்து சேர்ந்துள்ளது. (ஒ-68)

## புதிய.....

புலிகள் இயக்கம் தனது வாக்குறுதிகளில் இருந்து பின்வாங்குவதால் அதை பேச்சுக்களுக்கு அழைப்பது சடினமாக உள்ளது என்றார்.

செய்தியாளர் ஒருவர், விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்குப் புதிய முயற்சி எதுவும் மேற்கொள்ளப்படுமா என்று கேட்டபோது, "பொறுத்திருந்து பார்ப்போம்" என்று திரு. காந்தி பதிலளித்தார். (அ - எ)

எமது புதிய வெளியீடு:

அர்ஜுன் - மாதுரி
"C. I. D. அர்ஜுன்"
அடுத்த வெளியீடுகள்:
"மனசுக்குள் மத்தாப்பு"
"தாய்மேல் ஆணை"
குணம் வீடியோ சென்றர்
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(C/6045)

மானிப்பாய் கோவில்பற்று
லயன்ஸ் கழகம்
## சீட்டிழுப்பு முடிவு

மேற்படி கழகத்தினரால் நடாத்தப்பட்ட சீட்டிழுப்பில் வெற்றி ஈட்டிய டிக்கட்டுக்களின் விபரம்.

| | |
|---|---|
| 1 ஆம் பரிசு டிக்கட் இல:- | 9401 |
| 2 ஆம் " " " :- | 7907 |
| 3 ஆம் " " " :- | 6418 |

ஆறுதல் பரிசுகள்
டிக்கட் இலக்கம்

| | |
|---|---|
| 1 ஆம் பரிசு:- 6748 | 2 ஆம் பரிசு:- 7846 |
| 3 ஆம் பரிசு:- 8022 | 4 ஆம் பரிசு:- 8078 |
| 5 ஆம் பரிசு:- 2393 | 6 ஆம் பரிசு:- 18 |

வெற்றியீட்டிய டிக்கட்டுகளின் உரிமையாளர்கள் கடித மூலம் செயலாளர் திரு. C. பாலகிருஷ்ணன் லோட்டன் வீதி, மானிப்பாய் எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

- தலைவர்
(5591)

DIPLOMA
IN
PHARMACY
புதிய 5ஆம் பிரிவு ஆரம்பம்:
06 - 08 - 1988
NORTH CEYLON
TECHNICAL INSTITUTE
14, St. Peters Lane,
JAFFNA.
(C 6055)

உஷா
தையல் மீது மையல் கொள்ள வைக்கும்
தையல் மெஷின்கள்




சகல பாகங்களும் உலோகத்தினால் செய்யப்பட்டு பிளேட் செய்யப்பட்டது. ஒரு வருட உத்தரவாதம்
இலகுதவணை முறையிலும் வாங்கலாம்
உஷா இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்
68, அத்திடிய ரோட், ரத்மலான தொலைபேசி: 71-6922, 71-7934, 71-7381.

யாழ். (மாநகர) வர்த்தக ஊழியர் சங்க
### பொதுக் கூட்டம்

மேற்படி சங்கத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 07-08-1988 ஞாயிற்றுக்கிழமை காலை 9 00 மணிக்கு சங்கத் தலைவர் திரு. மா. இலக்குமிகாந்தன் தலைமையில் யாழ். விக்ரோரியா வீதியில் உள்ள சுபாஸ் உல்லாச விடுதியில் நடைபெற இருப்பதால் சகல வர்த்தக நிலையங்களிலும் கடமைபுரியும் ஊழியர்களையும் கலந்து சமுகமளிக்கும்படி சங்கச் சார்பில் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இங்ஙனம்,
க. தியாகலிங்கம்
(5449) (கௌரவ செயலாளர்)

## மரண அறிவித்தல்கள்

### திரு. க. நாகலிங்கம்

கோண்டாவில் மேற்கு வாசியும் மலாயன் சுகாதாரசேவையில் கடமையாற்றியவருமான க. நாகலிங்கம் காலமானார். அன்னார் காலஞ்சென்ற மாணிக்கத்தின் அன்புக் கணவரும், பாலசுப்பிரமணியம் UK, சிவராசா UK, பரமேஸ்வரி, லோகேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவரத்தினம், ஏகாம்பரம் M L T, Dr. சண்முகராசா கிளிநொச்சி, லீலாவதி, ஜெயராணி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆனந்தி, சண்முகநாதன், நரேந்திரன், கலா, வேணி, ஜேசன், வேணன், சிவகுமாரன், சிவகுமாரி, லோகநாதன், சிவநுதா, ஜெயக்குமார், சிவேந்திரா, சிவேந்திரன், வனஜா, அனுஜா, சரோஜா, சிவனுஜா குமுதா, நிசாந்தி, பாலக்குமார் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், பிரணவின் பூட்டனாரும், சந்திரசேகரத்தின் (மலேசியா) அன்புச் சகோதரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (5 8-88) காலை 11 மணிக்கு நடைபெறும்.

தகவல்: Dr. வ. சண்முகராசா
K. K. S வீதி,
கோண்டாவில். (5456)

### இளையதம்பி சபாலிங்கம்
(ஓய்வு பெற்ற கல்லூரி அதிபர்)

இளையதம்பி சபாலிங்கம் புதன்கிழமை 04-08-88 இங்கிலாந்தில் காலமானார். இவர் காலம் சென்ற மலர்சோதியின் அன்புக் கணவரும், ஓய்வு பெற்ற அதிபர் இ கனகலிங்கத்தின் சகோதரரும், ஜோதிலிங்கம் (வைத்திய ஆலோசகர் இங்கிலாந்து), கற்பகாம்பிகை (கோலாலம்பூர்), ஜெகதாம்பிகை (இங்கிலாந்து), உதயலிங்கம் (பொறியியலாளர் இங்கிலாந்து), உதயகுமாரி (இங்கிலாந்து), ஜெயலிங்கம் (பொறியியலாளர் இங்கிலாந்து), அபயலிங்கம் (கணக்காளர் இங்கிலாந்து), கலைச்செல்வி (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜேஸ்வரி, புவனேந்திரராஜ், ஆனந்தபாஸ்கரன் பிறேமரூபா, மகேந்திரன், வசந்தகுமாரி, தேவகி, ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

"KURINJI", MILLFIELD LANE, HITCHIN, HERTS SG4 7NH, UNITED-KINGDOM என்னும் விலாசமுடைய மகன் ஜோதிலிங்கத்தின் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெறும்.

தகவல்: இ. கனகலிங்கம்.
98, அரசடி வீதி,
யாழ்ப்பாணம். (5455)

### திருமதி ஆறுமுகம் நாகம்மா

காலஞ்சென்ற திரு. த. ஆறுமுகம் மாஸ்டர் அவர்களின் பனைவி நாகம்மா காலமாகிவிட்டார். இவர் (காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை, வைத்திலிங்கம், செல்லப்பா ஆகியோரினதும்) சின்னத்துரையினதும் சகோதரியும், காலஞ்சென்ற பரமேஸ்வரி, காலஞ்சென்ற விஜயரட்ணம், ஓய்வு பெற்ற சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர் பாலசுப்பிரமணியம், பத்மநாதன் (Land Office - துணுக்காய்) ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற அருணா ஏஜென்சீஸ் பாலசுப்பிரமணியம், யோகேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் மாமியாரும், பார்த்திபன், பிரதீபன், பிரதீபா, முகுந்தீபா, சத்தியதீபா, Dr. ரஞ்சன், பகீரதன், ரஜனி, ராகுலன் ஆகியோரின் பாட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 1-8-88 திங்கட்கிழமை அளவெட்டியில் நடைபெற்றது இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். சீரற்ற கால நிலையால் சரிவர அறிவிக்கமுடியாமல் இருந்தமைக்கு வருந்துகிறோம்.

தகவல்.-
ஆ. பாலசுப்பிரமணியம்
ஆ. பத்மநாதன்
அளவெட்டி. (5454)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 05-08-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Friday 5th August 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org